# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

● ஆனி - 2023



# காற்றுவெளி
**கலை இலக்கிய இதழ்**

ஆனி - 2023

படைப்புக்கள் அனுப்ப :
neythal34@gmail.com
mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : muhammed sajid
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

காற்றுவெளி மின்னிதழின் ஆனிமாத இதழ் தங்களின் பார்வைக்கு வருகிறது.

தொடர்ந்து படைப்புக்கள் தந்துதவும் படைப்பாளர்களுக்கு எமது நன்றி. புதியவர்களையும் இணைத்து கைகோர்த்துப்பயணிக்க வேண்டி... புதியவர்களையும் காற்றுவெளியில் இணைத்துவருகிறோம்.முழுமையான காற்றுவெளி பற்றிய தங்கள் கருத்துக்களுடன் கூடிய கட்டுரை ஒன்றை எதிர்பார்க்கிறோம்.ஆரோக்கியமான விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அடுத்த இதழ் நம்மவர் சிறுகதைகளின் சிறப்பிதழாக வெளிவரும்.ஏற்கனவே படைப்புக்கள் கேட்டு தகவல்களை பலருக்கும் அனுப்பியுள்ளோம்.படைப்புக்களை 18/06/2023 இற்கு முன்னர் அனுப்புங்கள். படைப்புக்கள் 4 பக்கங்களுக்கு அதிகமாகாமலும்,யூனிக்கோட் எழுத்துருவிலும்(எழுத்துப்பிழைகளின்றியும்) அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

படைப்புக்கள் வேறெங்கும் பிரசுரமாகாமல் இருத்தல் வேண்டும்.

உலகத்தமிழர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் அனுஸ்டிக்கப்பட்டது. வருடாந்தம் நினைவு கூருதல் அவசியமெனினும்,மக்களின் அபிலாசைகளை அறிந்து மேற்கொள்ளவேண்டிய பணிகளை முன்னெடுப்பதும்,உலகநாடுகளின் அனுசரணையுடன் சர்வசன வாக்கெடுப்பின்மூலம் நமக்கான தீர்வை பெற்றுக்கொள்வதுடன்,இனப்படுகொலையாளிகளை சர்வதேச அரங்கில் தண்டிப்பதற்கான சூழலையும் உருவாக்கவேண்டும்.அதுவே நமக்காக நம் மண்ணில் ஆகுதியாகிய மக்களினதும்,மாவீரர்களினதும் ஆத்மாக்களுக்கு நாம் செய்யும் கடமையுமாகும்.

இவ்வாண்டு காலம் கைகூடுமாயின் அச்சிதழாக ஓரிரு இதழ்களைக் கொண்டுவரலாம் .

காத்திருப்போம்.

நட்புடன்

சோபா

*01/06/2023*

# படைப்புகளின் பங்குதாரர்கள்

**கவிதைகள் :**


1. ரகுநாத் வ
2. சா. கா. பாரதி ராஜா,
3. ச.ஆனந்தகுமார்
4. பாரியன்பன் நாகராஜன்
5. ஸ்ரீவி.முத்துவேல் (சென்னை)
6. மைத்திரிஅன்பு (காஞ்சிபுரம்)
7. மு.முபாரக்
8. ஐ.தர்மசிங் (நாகர்கோவில்)
9. இரா. மதிராஜ்,
10. ம.ஆச்சின்.
11. இளையவன் சிவா ( மடத்துக்குளம்)
12. பா.சிவகுமார்
13. இரா.வெங்கடேஸ் குமார், மதுரை
14. கவிஜி
15. க. புனிதன்
16. மெய்யன் நடராஜ்
17. சே கார்கவி கார்த்திக்

**சிறுகதைகள் :**

1. திருமலை சுந்தா (கடுகுக்கதைகள்)
2. நௌஷாத் கான் .லி
3. ரிஷபன்
4. சுந்தரிமணியன், புதுர்
5. தி.வள்ளி (திருநெல்வேலி)

**கட்டுரைகள் :**

1. பெரணமல்லூர் சேகரன்
2. கமலினி கதிர்(சுவீஸ்)
3. சங்கர சுப்பிரமணியன்.
4. மொழிபெயர்ப்பு:
   எஸ். ஃபாயிஸா அலி.
   (ஆங்கிலத்தில்:அனாமிகா ரிஷி)



ரகுநாத் வ, மதுரை

## மாடப்புறாவின் தீண்டல்

*சிதறிக் கிடக்கின்றன*
*தூவப்பட்ட எண்ணத்*
*தானியங்கள்*
*தியானத்தில் உட்புறஞ்*
*சுற்றிவருகின்றன*
*பறக்கப்பயிலும் மடப்புறாக்கள்*
*சிறகுகளை விரித்து*
*பறக்கத் தொடங்குகிற*
*இதயப்பச்சிக்கு திசையேதும்*
*தெரிவதில்லை*
*அவிழ்ந்த மூளைச்சிறகுகளை*
*அடக்குகிறது ஞானப்பறவை*
*மூடிய செவிகளில்*
*வந்திறங்கும் கனமற்ற*
*அகவல்களில்*
*சிதறாமல் கிடக்கும்*
*மூளைத் தானியத்தின்*
*குறுக்கு வெட்டுத் தோற்றத்தினை*
*கொத்தத் தொடங்கின*
*மொட்டைமாடி மாடப்புறாக்கள்.*

சா. கா. பாரதி ராஜா

## துளிப்பாக்கள்

*சாய்ந்தாலும் மரங்கள்*
*காட்டிக் கொண்டிருக்கின்றன*
*புயல் சென்ற திசையை*

*மீன்கள் நீந்தவில்லை*
*கரையை நோக்கி நீந்துகிறது*
*சுமந்து வரும் படகு*

*மனிதர்கள் எதற்கு?*
*பறவைகள் பாடுகின்றன*
*புத்தர் சிரிக்கிறார்*

*தினமும் வரலாம் அமைச்சர்*
*எதிர்பார்க்கும் மக்கள்*
*சாலைகள் சுத்தமாகும்*

*சண்டையிடும் மக்கள்*
*அமைதியாக இருக்கிறார்*
*கடவுள்*

*உணவு கிடைக்கவில்லை*
*பசியைப் போக்கியது*
*நாய்க்குட்டிகளுக்கு விளையாட்டு*

திருமலை சுந்தா

# கடுகுக்கதைகள் : மூன்று



### கடன்


இரண்டு காகங்கள் ஐம்பு சுவையில்
தம்மை மறந்து பேசிக்கொண்டன.
"கடன் வாங்காதே..கொடுக்காதே..."
அவர் எட்டிப் பார்த்தார். குரல் எந்த திசை
யில் இருந்து வந்ததென்று அவரின்
கண்கள் தேடின.
அவரின் கண்களுக்கு அந்த காகங்களே
தெரிந்தன.
இப்போது........
"கடன் வாங்காதே..கொடுக்காதே.."
அந்த குரல் தான் அவரினுள் இருந்து
எழுந்து கொண்டிருந்தது.

### முடியாத போது...

"முதுமை என்னை வாட்டி
வதைக்கின்றது..."
கறுத்தக் கொழும்பானின் கதறல்
கேட்டது.
அந்த மதில் எத்தனை காலம் தான்
தாங்கிப் பிடிக்கும்...?
"என்ன செய்வது..அனுபவிக்கத்
தானே வேணும்...."
மதில் சொன்னது.
எட்டிப் பார்த்த அவர் அந்த குரல்களை
செவிமடுத்தார்.
அவருக்கு வந்த புன்சிரிப்பும்
மௌனமானது.

### இருப்பதும் இல்லாததும்

அந்த மாமரத்தில் சல..சலப்பு...
மாங்காய்கள் பேசிக்கொண்டிருந்தன.
"இருப்பதை தொலைத்தவன் ஏமாளி.."
என்றது ஒரு மாங்காய்.
" இல்லாததை தொலைத்தவன் கடனாளி
...." என்றது இன்னொரு மாங்காய்.
"ஆமாம்..ஆமாம்.."என்றது அந்த மாமரம்.
மாங்காய்களிடமிருந்து சல..சலப்பு..
மௌனமானது.



# ஆகாய அஸ்தமன பூக்கள்..

சீறி கொண்டு இருக்கும் ஓயாத கடல் அலைகளுக்கு மேல பறந்து கொண்டு இருந்தது அந்த ஆகாய பறவை அதில் பலதரப்பட்ட மக்கள் பயணித்து கொண்டு இருந்தனர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு கனவை சுமந்தபடி ஆகாயத்திற்கு மேலே அந்த அதிசய வாகனத்தில் சிலாகித்து சென்று கொண்டு இருந்தனர்.

பால் வாசம் மாறாத பச்சிளம் குழந்தை ரெண்டு,பார்ப்பதற்கே அழகாய் இருந்தது. அடிக்கடி அந்த விமானத்தின் ஓசையை கேட்டு அழுதது.அந்த விமானத்தில் உள்ள பல பேர் அந்த குழந்தைக்கு விளையாட்டு காட்டி அதன் அழுகையை நிறுத்தினர்.அந்த குழந்தையின் தாய் தான் ரொம்பவும் பரிதவித்து போனாள் ...

குழந்தையின் புன்னகைக்கு பிறகு தான் அந்த தாய் கொஞ்சம் சமாதானம் ஆனாள் ...

மறுபுறம் தன் தாயை பார்க்க போகும் ஒரு பட்டதாரி வாலிபன்.எத்தனை வருட பிரிவு இந்த விமானம் எப்போது தரை இறங்கும் .என் தாயை எப்போது காண்பேன் என்ற அன்பின் ஆசையில் வரப்போகும் அந்த அன்பு நொடிகளுக்காக காத்து கொண்டு இருந்தான்.

பெண்ணாக பிறந்தும் வறுமையின் காரணமாக அயல் நாட்டில் கஷ்டப்பட்டு உழைத்து தன் குடும்பத்தின் நிலையை சரி செய்து சாதனை பெண்ணாக தன் நாட்டிற்கு செல்லும் கண்மணி வயது 34 ,இதுவரை தன் குடும்பத்துக்காக திருமணம் கூட செய்து கொள்ள வில்லை .தன் அம்மாவுக்காகவும் தங்கச்சிக்காகவும் வைராக்கியமாக பல

இன்னல்களுக்கும் இடையில் அயல் நாட்டு தேசத்தில் உழைத்து தன் குடும்பத்தை முன்னேற்றியவள் .ஆறு வருடத்திற்கு பிறகு தன் குடும்பத்தை காண செல்கிறாள்.கண்மணிக்கு கல்யாணம் வேறு நிச்சயிக்கப் பட்டு இருக்கிறது...

இன்னும் ஒரு நாள் கழிந்தால் கண்மணிக்கு கல்யாணம்,எத்தனை கனவுகள் அவள் உள்ளுக்குள் ஊசலாடி கொண்டு இருந்தது.இப்போது அவள் மனசு வானில் ரெக்கை கட்டி கொண்டு பறந்தது ....

விமானத்தின் கடைசி சீட்டில் அமைச்சர் வாசு,தன்னிடம் உள்ள ஆயிரம் கோடி கருப்பு பணத்தை ஒரு வழியாக வெளிநாட்டு வங்கியில் டெபாசிட் செய்து விட்டு திரும்பி சென்று கொண்டிருக்கிறார்.

ஊருக்கு போனவுடன் மக்களுக்கு என்னென்ன உருப்படாத திட்டங்கள் அறிவிச்சு அதன் மூலம் எவ்வளவு கொள்ளை அடிக்கிறதுன்னு திட்டமிட்டு கொண்டிருந்தார் .....

விமானத்தில் ரோஜாவும் பயணித்து கொண்டு இருந்தாள் ,கணவன் சரி இல்லை,சரியான குடிகாரன் வாழ்வதற்கு வழி இல்லை.தெரிந்தவர் மூலம் வெளிநாட்டு வீட்டு வேலைக்கு வந்த இடத்தில ஒரு கும்பல் அவளை ஏமாற்றி ,வற்புறுத்தி ,அடித்து ,துன்புறுத்தி விபச்சார தொழிலில் போட்டது.

அந்த ஈன தொழிலை செய்ய மறுத்தால் தினமும் அடி உதை தான் .

பல வருட நரக வாழ்க்கைக்கு பிறகு அந்த ஊர் போலீஸ் மூலம் மீட்கப் பட்டாள் .

வெளிநாடு வந்து ஆறு மாசம் ஆச்சு ஆனால் அவசர அவசரமாக ராஜு தாய் நாடு திரும்ப போவதற்கும் காரணம் உண்டு.ஏனென்றால் காதலித்த பெண்ணிடம் கல்யாணத்திற்கு முன்பே எல்லை மீறி நடந்து விட்டான் .இப்போது அவள் நிறைமாத கர்ப்பிணி.

தான் தகப்பன் இல்லாமல் கஷ்டப்பட்டதை போல தனக்கு பிறக்க போகும் மகனோ ,மகளோ தந்தை இல்லாமல் கஷ்டப்பட்டு விடக் கூடாது என்ற எண்ணம் அவன் இதய துடிப்பை அதிகமாக துடிதுடிக்க வைத்து கொண்டு இருந்தது.தன்னை நம்பி தன் கற்பு ,மானம் என்று எல்லாத்தையும் ஒப்படைத்த தன் காதலியின் பெயர் இந்த சமுதாயத்தில் கலங்க பட்டு விடக் கூடாது ,ஊரில் கால் வைத்தவுடன் அவளை தன் மனைவியாக்கி விட வேண்டும் என்ற எண்ண ஓட்டத்தில் அவனது மனம் விமானத்தோடு விமானமாக அதிக பாரத்தை சுமந்து கொண்டு பறந்தது .....

அப்போது ஒரு பைலட் பயணிகளுக்கு எந்த பிரச்சனையும் இல்லாமல் இந்த விமானத்தை தரை இறக்க வேண்டும் என்று தன் மனதுக்குள் இறைவனை வேண்டி கொண்டு இருந்தார்.இன்னொரு பைலட் ரொம்ப நாளாக தன் மனதுக்குள் வைத்திருந்த காதலை தன்னுடன் பணி புரியும் தன் சக தோழியான ஏரோயிஸ்ட் அஞ்சலியிடம் தன் காதலை சொல்லி விட்டார்.அவளும் சம்மதித்து விட்டாள் அதனால் எல்லையற்ற சந்தோஷத்தில் மிதந்து கொண்டு இருந்தார்.

அந்த விமானத்தில் பயணித்து கொண்டு இருந்த இன்னொரு பெரும்புள்ளி ஏரோயிஸ்ட்யிடம் எவ்வளவு உன் ரேட்டு என்று மட்டமான மொழியில் பேசிக் கொண்டு இருந்தார்.தாஜ் ஹோட்டல் புக் பண்ணிடுறேன் ஒரு மணி நேரத்துக்கு ரெண்டு லட்சம் தரேன்னு பேசி கொண்டு இருந்தார்.

அந்த விமானத்தில் எத்தனை மனிதர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பல கனவுகள்,பறக்கும் விமானத்தின் உயரத்தை விட அனைவரது வாழ்க்கையும் கனவுகளும் உயர்ந்தது,அதை அறியாமல் அகங்காரத்துடன் நான் தான் பெரியவன் என்ற மமதையில் சென்று கொண்டு இருந்தது அந்த விமானம்.

திடீரென பைலட் முகங்களில் கலவரம்.இன்ஜின் கட்டுப்பாடு இல்லாமல் சென்று கொண்டு இருந்தது . விமானத்தில் பயணித்த யாருக்கும் எந்த செய்தியும் அறிவிக்க படும் முன்னரே அந்த விமானம் கடலில் விழுந்து வெடித்து சிதறியது.

மறுநாள் செய்தி தாள்களில்..


மலேசியாவில் இருந்து சென்னை வந்த விமானம் இஞ்சின் கோளாறு காரணமாக கடலில் விழுந்து வெடித்து சிதறியது .சம்பவ இடத்திலே 264 பயணிகளும் இறந்தனர்.

படிக்கும் உங்களுக்கு எல்லாம் அது வெறும் தலைப்பு செய்தி,ஆனால் சம்பந்த பட்ட குடும்பத்துக்கு அது காலத்துக்கும் மறக்க முடியாத இரணம்.

விமானத்தில் பயணித்தவர்களுக்கு எத்தனை கனவுகள், ஆசைகள் இருந்திருக்கும் ஆனால் எல்லாம் ஒரு நொடியில் கானலாய் போனது.விதியின் விபத்துகளால் மனிதனின் வாழ்க்கை நிர்மூலமாக்கப் படுகிறது.இந்த பிரபஞ்சத்தில் நடக்கும் எதையும் அந்த கருணையே இல்லாத ஆண்டவனை தவிர எவராலும் மாற்ற இயலாது, முடியாது!!

சாதாரண மனிதனின் கனவு மட்டுமல்ல வாழ்க்கையையும் நமக்கு மேல் உள்ள கண்ணுக்கு தெரியாத ஏதோ ஒரு சக்தி தான் நிர்ணயிக்கிறது.....

நிர்ணயம் செய்யப்படும் விதியின் விளையாட்டை மனிதன் மாற்ற முடியுமா என்ன ??



# அவகாசம்

அம்மியில் அரைபடும் சத்தம் கேட்டது. மீனாட்சி தான். சட்னி அறைத்துக் கொண்டிருக்கிறாள். அவசரம் என்பதால் சற்று வேகமாக கடகடா.

பன்னீர்செல்வம் எதையோ மிதித்துவிட்ட பதற்றத்தில் இருந்தான்.

“எதுக்கு....அவங்களுக்கு வீண் சிரமம் என்றான் நாலாவது தடவையாக.

கிராமத்திலிருந்து வருகிறான். சரக்கு பிடிக்க வந்தானாம். எங்கள் வீட்டில் கொடுக்கச் சொல்லி மாமா கொடுத்து விட்ட பார்சலைச் சேர்க்க வந்தான்,

‘அப்ப நான் வரட்டுமா...” என்றான் பார்சலைக் கொடுத்த மறு நிமிடம்.

‘அவர இருக்கச் சொல்லுங்க மாமா. இட்லி அவிச்சாச்சு. சாப்பிட்டுட்டுப் போவட்டும்” என்றாள் மீனாட்சி.

என்ன சொல்றே என்கிற ரீதியில் அவனைப் பார்த்துச் சிரித்தேன்.

“இல்ல நான் போவணும். இன்னொரு தடவ வரப்ப பலகாரம் சாப்பிடறேன்” என்றான் சற்றே நெளிந்து.

“சும்மா இருப்பா. பிகு பண்ணிக்கிட்டு...” என்றேன் உரிமையாய்

“பஸ்ஸைவிட்டு இறங்கின உடனே பஸ் ஸ்டாண்டு கடையில டிபன் முடிச்சாச்சு. கைய வேணா வாசம் பாருங்க” என்றான்.

“பொறவு எத்தனை நேரம் பஜார்ல சுத்தினே. செரிச்சுப் போயிருக்கும்.”

“இன்னொரு தடவை வரப்ப” இழுத்தான்.

எப்படியாவது தட்டிக் கழித்துப் போகிற உணர்வில் அவன் இருப்பது புலனானது.

“சரி...கட்டித் தாரேன், போறப்ப பஸ்ஸுல திங்கட்டும்”

சபாஷ் சரியான போட்டி.

‘அப்புறம் என்ன பன்னீரு, உக்காரு.”

“ரெண்டே நிமிஷம், கார சட்னி அரைச்சிடறேன். தூளு கூடத் தீர்ந்து போச்சு.”

மீனாட்சி உள்ளே போனாள். பன்னீர் இருக்கை நுனியில் அமர்ந்தான் தடுமாற்றம் தெரிந்தது.

“உன் தங்கச்சி....எப்படி இருக்கா? ஏதாச்சும் விசேஷம் உண்டா...”என்றேன்.

‘கடுதாசி வரலே...வரணும் எதிர்பாத்துக்கிட்டு இருக்கோம்.”

“ஒனக்குப் போட்டியா யாரோ கடை ஆரம்பிச்சத சொன்னியே....போன தடவை பார்த்தப்ப”

காத்திருந்தல் தெரியாமல் இருக்க பேச்சில் வலை போட்டேன். நழுவி ஓட வகை புரியாத தவிப்பு அவனிடம்

“ரெண்டு மணி நேரந்தான்...பஸ்ஸுல டியனெல்லாம் வேணாமே.”

“இதோ ஆயிருச்சு.’

மீனாட்சியின் குரல் கேட்டது. எவர்சில்வர் டப்பாவில் போட்டுக் கொண்டு வந்தாள்.

“டப்பாவா... அது எதுக்கு “

“அடுத்த தடவை வரப்ப கொண்டு வாயேன்”

‘இல்லே. பொட்டலமாக் கட்டிருங்க. டப்பால்லாம் வேணாம்”

மீனாட்சி மீண்டும் உள்ளே போனாள்.

தினசரிப் பேப்பருடன் நானும் போனேன்.

“என்ன.... இப்படி அலட்டறான் ஒரேடியா. நம்ம வூட்டு பலகாரம் கசக்குதாமா?” என்றேன்.

‘அப்பவே சாப்பிடப் படுத்துவாரு. அம்மா

சொன்னாத்தான் கை நனைப்பாரு. வீம்புக்கார மனுஷன்.”

மீனாட்சியின் குரலில் லேசான பதற்றமும் பழைய நினைவுகளிலான மலர்ச்சியும் தென்பட்டன்.

நறுவிசாய்க் கட்டிக் கொடுத்தாள்.

“நீயே கொடு அவன்கிட்டே” என்றேன்.

பன்னீர் எழுந்து நின்றிருந்தான்.

ரேஸ் ஓடக் காத்திருப்பவன் போலத் தோற்றம். பொட்டலம் கைக்கு வந்ததும் ஓடப் போகிறான்.

மீனாட்சி அவனிடம் பொட்டலத்தை நீட்டினாள். கீழே போட்டு விடுகிறவன் மாதிரி நுனியில் பற்றி வாங்கினான்.

“அப்ப வரட்டுமா.....”

“சரி. வர ஞாயிறு முடிஞ்சா வரோம்னு சொல்லு.”

“வரேன்” என்றான் யாரையும் பார்க்காமல் தரையைப் பார்த்து.

போனதும் கதவை மூடினேன்.

“ ஹப்பா. அவனைச் சாப்பிட வைக்க இத்தனை சிரமமா?” என்றேன்.

மீனாட்சியின் விழியோரங்கள் பனித்திருந்தன. நான் அதைக் கவனிக்காதவன் போலப் போய் அமர்ந்தேன்.

“சரி. எனக்கு இட்லி வையி. சட்னி இருக்கில்லே..”

கொண்டு வந்து வைத்தாள்.

“நீயும் ஒக்காரு, சேர்ந்து சாப்பிட்டுரலாம்.”

“வேணாம். நீங்க சாப்பிடுங்க. பொடிக்கு வறுத்து வச்சேன். அதை அரைச்சுட்டு வந்துடறேன்” என்றாள் பிசிறிய குரலில்

எடுத்துப் போட்டுச் சாப்பிட ஆரம்பித்தேன்.

மீனாட்சி அரைக்கிற சத்தம் மீண்டும் கேட்டது. அழுது கொண்டிருப்பாள் நிச்சயமாய் தன் கண்ணீரை நான் பார்த்து விடக்கூடாது என்றுதான் உள்ளே போய்விட்டாள்.

இப்போது நான் கவனித்துக் கேட்டாலும் மிளகாய்த் தூள் கண்ணுல பட்டுருச்சு என்று சுலபமாய் மழுப்புவாள்.

பரவாயில்லை. அழட்டும். முன்பை விடக் கண்ணீர் இப்போது குறைந்திருக்கிறது. தினசரி என்பது, வாரம், மாதம் ஒன்று என்ற அளவில் ஆகிவிட்டது. பன்னீரும் இப்போது தன் வருகையை மிகவும் குறைத்துக் கொண்டிருக்கிறான். கிராமத்திலேயே சொந்தத்தில் வேறொருத்தியைக் கட்டி வைக்கச் செய்யும் முயற்சிகளுக்கு இப்போது எல்லாம் மறுப்புச் சொல்வதில்லையாம். தகவல் வந்தது.எப்படியும் மடங்கி விடுவான்.

ஈர்த்து விட்டிருந்த நெஞ்சங்களுக்கு உதறித் தள்ளத் தேவையான அவகாசமும் தரவேண்டும் இல்லையா.

பாவம். மீனாட்சி.. தேறி நிமிரட்டும்.+


# நூல் மதிப்புரை: வெள்ளி மயிலிறகு

இன்றைய உலகம் உயர்தொழில்நுட்ப உலகமாக உள்ளது. சிறுவர்கள் கைகளிலும் திறன்பேசிகள் தவழும் காலமிது. இந்நிலையில் வாசிப்பை வசப்படுத்த இளம் பிராயத்தில் இருந்தே துவங்க வேண்டியுள்ளது.

'ஒரு ஊர்ல ஒரு ராஜா' எனத் துவங்கி கதை சொல்ல வீடுகளில் மூத்த குடிமக்கள் குறிப்பாக பாட்டிகள் இல்லை. ஒன்று முதியோர் இல்லத்தில் பாட்டிகள் இருக்கும் நிலை. இரண்டு தனியாகவே வாழும் நிலை. மூன்று அபூர்வமாக பாட்டியுடன் வாழும் வாய்ப்பிருந்தாலும் பாட்டி கதை சொல்லவும் குழந்தைகள் அதைக் கேட்கவும் தயாரில்லை.

தாங்க முடியாத புத்தகச் சுமை யுடன் பள்ளிக்குச் சென்று திரும்பும் குழந்தைகள் வீட்டுக்கு வந்ததும் வராததுமாக ட்யூஷன், பாட்டுக்கிளாஸ், டான்ஸ் கிளாஸ், இந்தி கிளாஸ், கராத்தே கிளாஸ் என ஏதேனும் சிலவற்றில் குழந்தைகளைச் சேர்த்துவிட்டு பெற்றோர்கள் குழந்தைகளைப் படுத்தும் பாடு சொல்லி மாளாது.

இந்நிலையில் குழந்தைகள் பாடப்புத்தகங்களைத் தவிர்த்து கதைகளை, பாடல்களை, கட்டுரைகளை உள்ளடக்கிய நூல்களை வாசிக்க வேண்டுமெனில் பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டியகு அவசியம். அனால் வேலைக்குப் போகும் பெற்றோர்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் உழைப்புச் சுரண்டலில் உழன்று வீட்டுக்கு வந்தவுடன் ஓய்வும் உறக்கமுமே தழுவும் யதார்த்த நிலை. இவற்றையெல்லாம் மீறி குழந்தைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"




வார விடுமுறை தினத்திலாவது இத்தகைய பணியை மேற்கொள்ளலாம்.

நூல்களை வாசிக்கக் கொடுக்கும்போது அவை கதைகளாகவும் பாடல்களாகவும் இருப்பதே உகந்தது. அத்தகைய கதைகளை உள்ளடக்கி வந்துள்ள நூல் வரிசையில் 'வெள்ளி மயிலிறகு' குறிப்பிடத் தக்க சிறுவர் இலக்கியம் எனின் மிகையன்று.

இந்நூலில் உள்ள 20 கதைகளும் சிறுவர்கள் ஆர்வமாகக் கேட்கவும் படிக்கவுமானவை. வாசிக்கக் கேட்பதும் வாசிப்பதும் சிறுவர்களின் அந்தந்த வயதைப் பொறுத்தது.

அறிவுரை சொன்னாலே பிடிக்காத சமுதாயமாக இன்றைய இளைஞர்கள் சமுதாயம் உள்ளது கண்கூடு. எனினும் அப்படியே இளைஞர்களின் போக்கிலேயே விட்டுவிடவும் முடியாது. எனவேதான் கதையைச் சொல்லி அதன் மூலம் இறுதியில் நீதியையோ அறிவுரையையோ சொல்லும்போது அது ஏற்கத்தக்கதாக அமைகிறது.

அத்தகைய கதைகளைக் கொண்ட நூலாக அமைந்துள்ளது 'வெள்ளி மயிலிறகு'.

முதல் கதையையே நூலின் தலைப்பாக்கியுள்ளார் நூலாசிரியர். அத்தகைய முதல் கதையான 'வெள்ளி மயிலிறகு'கதை மூலம் ஒருவர் மற்றவர்க்கு உதவி செய்து அதன்மூலம் மகிழ்ந்து வாழ்வதால் ஏற்படும் நன்மையை விலங்குகள் மற்றும் பறவைகள் மூலம் பசுமரத்தாணியாய் சிறுவர்கள் மத்தியில் பதிய வைக்கிறார்.

ஒரு சமூகம் முன்னேறவும் ஒரு குடும்பம் மகிழ்வுடன் வாழவும் உழைப்பு இன்றியமையாதது. அத்தகைய உழைப்பின் அவசியத்தை உணர்த்த வேண்டிய மன்னனே உழைப்பைப் பற்றிக் கவலைப்படவில்லையென்றால் அந்நாடு வளர்ச்சி காணாது. மன்னனையும் உணரச்செய்து மக்களையும் உணரச் செய்து முன்னேற்றம் கண்டதை 'உண்மையான அரசன்' கதை மூலம் அறிய முடிகிறது.

நேர்மை என்பது வாழ்வின் ஓர் அங்கம். அதை சிறுவயதிலிருந்தே நேசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதைத்தான் செய்துள்ளது 'முத்துநிலவனின் நேர்மை' எனும் கதை.

பிறக்கும்போதே திருடர்களாய் யாரும் பிறப்பதில்லை. சந்தர்ப்ப சூழ்நிலையால் திருடனாக மாறினாலும் திருடனின் தவறை திருடனையே உணரச் செய்து திருந்தி வாழச் செய்தல் குறிப்பிடத்தக்க முக்கிய சேவை. 'மாறிய திருடன்' எனும் கதை அதைச் செய்து காட்டியுள்ளது.

'இடைவிடாத பயிற்சி' மூலம் எண்ணியதை சாதிக்கலாம் என்பதையும், 'பட்டாம்பூச்சிகள்' மூலம் அன்பாக இருக்க வேண்டும் என்பதையும் கற்பித்துள்ளார் நூலாசிரியர்.

கல்வி, கலை எதுவாயினும் தொடர்ந்து கற்று வர வேண்டும். அதன்மூலம் அவற்றில் சிறந்து விளங்க முடியும் என்பதை 'உண்மையான சிற்பி' கதை உணர்த்துகிறது.

கழுதையானாலும் அதை மதிப்பவரிடத்தில் அது மகிழ்வுடன் உழைக்கிறது என்னும் கதை மூலம் பிறரை மதித்து நடக்க வேண்டும் என்னும் நல்ல விதைகளை விதைத்துள்ளது பாராட்டத் தக்கது.

ஏட்டுக் கல்வி மட்டுமல்லாமல் அனுபவக் கல்வி, வாழ்க்கைக் கல்வி போன்றவற்றை சிறுவர்கள் கற்க வேண்டும் என்பதை 'வெற்றிச் செல்வன் கற்ற பாடம்' மூலம் கற்பிக்கிறார் நூலாசிரியர்.

'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' என்பது முதுமொழி. அதை 'கண்ணுக்குத் தெரியாத உண்மை' என்ற கதையில் போதிக்கிறார் நூலாசிரியர்.

'நல்லதை மட்டும் கேள். தீயதாக இருந்தால் ஒரு காதில் வாங்கி மறு காதில் விட்டுவிடு' என்பர் பெரியோர். அதைத்தான் சொல்கிறது 'கடத்தி-கடத்தி அல்லாதது' எனும் கதை.

மக்கள் எண்ணங்களை அறிய மாறுவேடத்தில் அரசர்கள் நகர்வலம் வருவது வழக்கம். சில கதைகளில் இது கையாளப்பட்டுள்ளது. அதில் ஒரு கதைதான் 'அரசர்-அமைச்சர்'. அதே போன்றுதான் அரசனாக இருந்தாலும் குடியானவன் கூறிய அறிவுரையால் சாப்பாட்டுப் பிரியனாய் இருந்த அரசன் மக்கள் பிரியனாய் மாறியதை ஒரு கதையின் மூலம் உணர்த்தியுள்ளார் நூலாசிரியர்.

'சிவநேசன் சத்திரம்' எனும் கதை 'உழைப்புக்கேற்ற ஊதியம்', 'பணிச்சுமைக்கேற்ற பணியாளர்' அவசியம் என்னும் தொழிற்சங்க பாலபாடத்தைப் போதிக்கிறது.

இப்படியாக இருபது கதைகளும் சிறுவர்களுக்கான கதைகளாக வடித்திருந்தாலும் பெரியவர்களும் மனதிற் கொள்ள வேண்டிய கதைகளாகவே உள்ளன.

டாக்டர் சிரியின் தெலுங்கு மொழியிலான இந்நூலை ஏ.ஆர். பாலசுப்ரமணியம் சிறப்பாக மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். ஒவ்வொரு கதைக்கும் படங்களை இடம் பெறச் செய்து அழகிய முறையில் அச்சிட்டு வழங்கியுள்ள பாரதி புத்தகாலயம் பாராட்டுக்குரியது. இந்நூலை வாங்கி சிறுவர்களுக்கு வழங்குவதும் அவர்களை வாசிக்கச் செய்வதும் இந்நூல் வீட்டு நூலகத்தில் இடம் பெறச் செய்வதும் பெற்றோரின் தலையாய கடமை.

.. வெள்ளி மயிலிறகு

டாக்டர் சிரி

தமிழாக்கம்: ஏ.ஆர்.பாலசுப்ரமணியம்

பக்கங்கள் 112

விலை₹ 110

பாரதி புத்தகாலயம்

7 இளங்கோ சாலை, தேனாம்பேட்டை

சென்னை 600018

பாரியன்பன் நாகராஜன்

# நான் மட்டும் விழித்துக் கொண்டிருந்தேன்

இனிய மாலைப்பொழுது
வெட்டவெளியில் தனியாய்
அமர்ந்தபடி இரவுவொன்றைச்
செய்து கொண்டிருக்கிறேன்.
பலர் ஆச்சரியமாகவும்
சிலர் அலட்சியமாகவும்
கடந்து கொண்டிருக்கிறார்கள் என்னை.
என்னிடம் ஆர்வம் மிகுதிபட
வினவுபவர்களுக்கு
நான் செய்து கொண்டிருக்கும்
இரவு குறித்து
விவரித்து விளக்கமளிக்கிறேன்.
அந்திசூரியன் அடிவானில்
நுழைந்ததின் பொருட்டு
நான் செய்து முடித்த இரவு
வானமெங்கும் கவ்வத்தொடங்குகிறது.
நீங்கள் எல்லோரும்
இருட்டில் இருக்கின்றீர்களென்ற
அச்சத்தில் அழகாய்
நிலவொன்றைச் செய்து முடிக்கிறேன்.
நிலவதன் ஒளிவெள்ளத்தை
உமிழத்தொடங்குகிறது.
அதுவரையில் மௌனித்திருந்த நீங்கள்
சிரிக்கத் தொடங்குகிறீர்கள்.
உங்களின் ஒவ்வொருவரின்
சிரிப்புக்குமாய் வானில்
ஒரு நட்சத்திரம்
மின்னத் தொடங்குகிறது.
என்னிரவையும் பால்நிலவையும்
ரசித்து முடித்த சில கணங்களுக்குள்
நீங்கள் எல்லோருமாய்
உறக்கத்தின் மடியில்
தவழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.
நான் செய்து முடித்த இரவுக்காகவும்
வானில் தனித்திருக்கும்
ஒற்றை நிலவிற்காகவும்
உங்கள் சிரிப்பினில் பூத்த
நட்சத்திரங்களுக்காகவும்
நான் மட்டும் விடியவிடிய
விழித்துக் கொண்டிருந்தேனென்பது
நீங்கள் ஒருவரும் அறியப்படாதவொன்று.



ஸ்ரீவி.முத்துவேல் சென்னை

# வென்றான் அயலான்

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

திருமலைநா யக்கர்வேள் சேயோன் பக்தன்
செவ்வரளி வதனத்தில் முருகன் தோன்றும்
திருப்பொழிவைக் கண்டார்க்குத் தெய்வ அன்பு
தேடாமல் உள்ளூறைய களிப்புக் கூடும்
பெரும்படையோர் தலைதாங்கிப் பெருமை ஏற்றுப்
பேராசை அயலவர்கள் கலத்தில் வந்தே
பருந்துகள்போல் தாய்மண்ணில் பறந்து வாழும்
பன்மக்கள் உயிர்கொன்ற டைந்தார் வெற்றி



மைத்திரிஅன்பு, காஞ்சிபுரம்

# மானுட முரண்பாடுகள்

“பாதுகாத்தல்’
படுகொலையை விடப் பயங்கரமானது.
பாதிப்போர் பார்வையில்
கசியும் வெறுமை பாதுகாக்கப் படவேண்டும்.
பயங்கரவாதத்தால் தான்
காலம் கடந்து – ஆழம் சென்ற
மக்கள் கூட்டத்தை,
மனித இனத்தைப் பாதுகாக்கமுடியும்.
முறையிடல் ஆகாது..
முழு ஊரடங்கு போதாது..
சுயநலம் சூழ நம்மைநாமே
பாதுகாத்தால் நன்மை என்றாகாது.. ..
ஒப்புக்குச் சொல்வதையெல்லாம்
ஒப்புக்கொள்வதால்..
ஒப்பந்தம் போட்டயாவும் மாறாது ஒருபோதும்...
பிணம் எரிந்தாலென்ன
பொருள் சரிந்தாலென்ன..
சகியாமல் பொறுத்திரு..
எழுந்தெழுந்து ஓடாதே
எடுத்த எடுப்பில் எரியாதே..
விளக்கென நீ எரிந்து விவரங்கள் பரப்பாதே...
விபரீதம் விளைக்காதே.. ..
விணான விவாதங்களுக்கு நிகராய்
தியானங்கள் நிகழ்த்து
பிரார்த்தனைகளில் கூடு..
பாதுகாக்கப்படுவாய்..
ஆனாலும்,
“பாதுகாத்தல்’
படுகொலையை விடப் பயங்கரமானது.!

# முபாரக் கவிதைகள்

பெரும் மழையைத் தந்தது
கடும் புயலைத் தந்தது
பலத்த பூகம்பத்தினைத் தந்தது,
கொடும் நோயைத் தந்தது...
இங்கு திருத்தவும் வருந்தவும்
எந்த மனிதரும் தயாராக இல்லை...
சோர்ந்து போனது காலம்!

பசியோடிருப்பவர்களுக்காய்
வருத்தப்பட்டாகிவிட்டது,
கூண்டுக்குள் அடைபட்டுக்கிடக்கும்
பறவைகளோடு கொஞ்சி பேசியாச்சு,
இனி கருணை மிகுந்த புத்தனுக்காய் செய்த
தங்க ஆபரணங்களை சூட்டிடவேண்டும்!

என்னை உனக்கு எவ்வளவு
பிடிக்குமென
பக்கத்து வீட்டு சிறுமியிடம்
கேட்கிறேன்...
இவ்வளவு பிடிக்குமென கைகளை விரித்துக்
காட்டுகிறாள்,
இவ்வுலகம் சிறிதாகி
அன்பு பெரிதாகத் தொடங்கியிருந்தது,
அக்கணத்தில்!

கோரப்பற்களுடன் வீதிகளில் வலம் வரும்
நாய்களை கண்டாலே,
அச்சம் பற்றிக் கொள்ளுமெனக்கு,
பல அடி தூரத்திற்கு முன்போ
பின்போ அவைகளை காண நேரிட்டால்,
பதற்றம் ஒட்டிக்கொள்ளும் இதயமெங்கும்,
அப்போது என்னருகே கடந்து போகின்றவர்கள்
எனக்கு கடவுளாகியிருப்பார்கள்,
ஒவ்வொரு முறையும் எத்தனையோ இன்பமான
செய்திகளை சுமந்து வருமெனக்கு துன்பமாக்கி
விடும் நாய்களின் மீதான அச்சம் குறையத்
தொடங்கியிருக்கிறது...
கோரப்பற்களுடன் அலையும் நாய்களின்
குட்டிகளுக்கு பிஸ்கெட் வாங்கிப்போட்ட
பின்னொரு நாளில்!

மல்யுத்த போட்டியில்
இரத்தம் வழிய படுபயங்கரமாய்
மோதிக்கொண்டிருக்கும் இருவரை
உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கும்
கூட்டத்தின் நடுவே
கண்ணீர்த்துளிகளோடு அடிவாங்கிக்
கொண்டிருப்பவனை பார்த்து
அப்பா அப்பாவென துடித்தழும் சிறுமியின்
அழுகைச்
சத்தம் யாருக்கும்
கேட்கவில்லை ...
அவளின் அருகில் அமர்ந்திருக்கும் கடவுளையும்
சேர்த்து!

ஓயாது குறைத்துக்கொண்டேயிருக்கின்றன நாய்கள்,
காற்று வீசும் சத்தம் தெளிவாய் கேட்கின்றன,
அவ்வப்போது வாகனங்கள்
செல்லும் சத்தம்,
எதோ ஒரு வீட்டில் ஓயாது
கேட்டுக்கொண்டேயிருக்கும்
இருமல் சத்தம்,
இரை தேடி வந்த எலிகளால்
சத்தமிடும் காலிப்பாத்திரங்கள்,
எல்லாம் உணர நேர்கிறது...
கெட்ட கனவால் விழித்துக்கொண்ட
ஒரு நடுஇரவில்!

ஐ.தர்மசிங், நாகர்கோவில்.


# "புதிய முகம்"

திண்ணையில் இடம் கொடுக்க
மடத்தை பிடிக்கும் தந்திரம்
மல்லாக்கப் படுத்துக் கொண்டது
மெய் வேடமிட்ட பொய்
பிஞ்சு விரலை
சுட்டு விரலால் சுட்டியும்
இளைய குரலை
உள்ளங்கையால் தட்டியும்
முதிர்ந்த குரலை
பாதங்களால் மிதித்தும்
பணிய வைத்தது
குரல்களை நசுக்கி
பக்குவப்பட்ட ஞானம்
குரல் வளையை நெரிக்கும்
சூட்சுமம் கற்றது
ஓடவும் ஒளியவும்
மார்க்கம் இல்லை
சாவிலும் ஆதாயம் தேடும்
சதியின் ஆதிக்கம்
திணிக்கப்பட்ட நீள் இருளை
கிழித்து வீசும் ஒளியின்
ஒற்றைக் கீற்றாக ஜொலித்தது
ஒரு புதிய முகம்
வீசிய வலையிலும் விழவில்லை
எறிந்த கற்களுக்கும்
அடங்கவில்லை
ஆதரவின் அஸ்திவாரத்தை
அசைத்தப் பின்னும்
ஏளனமாய் சிரித்தது
கடைசி அஸ்திரமாய்
தன் ஆக்டோபஸ் கரங்களால்
அதன் கழுத்தை இறுக்கி விட்டு
கைக்கொட்டி சிரிக்கும்
அந்த பொய்யின் ஆணவ முகத்தை
ஆழமாக கவனித்தால் புரியும்
சூழ்ந்திருக்கும் இருள்
வேசம் கலைவது வரை
சலங்கைக் கட்டி ஆடும் இருள்
நிலைபிறழாது உயிர்த்தெழும் வலிமை வாய்ந்த
மெய் தான்
அந்த புதிய முகம் எனும்
தீர்க்கம் புரிந்ததால்...

இரா. மதிராஜ்

# பார்வை

மணக்கோலத்தில் மெல்ல நடந்துவரும்
புது மண இணைகளையும்,
காட்டாற்று வெள்ளம் கரை புரண்டு
வருவதையும்,
பிஞ்சு பொன்விரல்களுடன்
தாயுடன் நடந்து செல்லும்
மழலைகளையும்,
கோசமிட்டு ஊர்வலம் வந்த
கூட்டத்தினரையும்,
வாழ்வாங்கு வாழ்ந்து
நீர் மாலை எடுத்து
காடுவெளி சென்றவர்களையும்,
வெகு தூரம் நடந்து வந்து
தாகம் எடுத்து இளைப்பாறியவர்களையும்,
கலப்பை சுமந்து உழுத
ஏர் மாடுகளையும்,
அதன் பின்னே
கோவணம் பாய்ச்சு
நடந்து வந்த கழனிவாழ்
உழவர்களையும்,
உச்சம் கொண்ட சாமிகளின் ஊர்வலங்களையும்,
உக்கிரம் கொண்ட மனிதர்கள்
மிருகங்களாகி நடந்து கொண்டதையும்,
நிலவொளிப் பட்டுத் தெரித்த
இடங்களில் பட்டும் படாமல்
அரங்கேறியக் காதலையும்,
செய் நன்றி மறந்து
தெரிந்தே செய்த கொலைகளையும்,
இந்த சுமைத்தாங்கி,
பெருமூச்சு விட்டுக் கொண்டு
பார்த்துக் கொண்டே தான்
இருக்கிறது,
விழிகள் இரண்டும்
இல்லாமலேயே,



ம.ஆச்சின்

## எதிர்மறை கவிவரையும் படி செய்தது தலைநகர்!


விண்ணில் ஓசையிட்டு செல்லும் விமானம்,
விரைந்து ஓடும் மாநகர இரயில்கள்,
சிக்னலில் தவித்துக் கொண்டிருக்கும்
இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள்,
அனுதினமும் பறக்கும் அவசர ஊர்திகள்,
பரபரப்பில் ஓடும் மருத்துவர்,
அவர்களுக்கு வழிவிடாமல் செல்லும்
மானிடக்கூட்டம்!
மரத்தை மறக்கச் செய்யும் மக்கள்தொகை,
எச்சில் உணவுகளை உண்ணும் காக்கைக் கூட்டம்,
அங்கங்கே தேங்கி நிற்கும் சாக்கடைகள்,
உச்சத்தில் தலைவிரித்தாடும் மதுபான கடைகள்,
பழங்குடியினரை பேருந்தில் அனுமதி மறுக்கும் நடத்துனர்,
பணமில்லையெனில்
பகுத்தறிவுப் படத்திற்கு கூட
அனுமதி மறுக்கும் திரையரங்குகள்
என எதிர்மறை கவிவரையும் படி செய்தது
தலைநகர்!

இளையவன் சிவா, மடத்துக்குளம்

## கண்ணாடி ஊஞ்சலில்..

உள்ளே கிள்ளி
வெளியே எறிந்தும்
உறங்கா மனதில்
எரியும் ரயில்.
நீரை அருந்தி
தாகம் தணித்தும்
எரியும் வயிற்றில்
கதறும் உயிர்கள்.
கண்கள் மூடி
உறக்கம் போர்த்தியும்
கனவில் உருளும் பிணங்கள்.
கையில் எடுத்து
வாயில் திணித்தாலும்
கசக்கிறது உணவும்.
எத்தனை நாள்
அணையாமல் கிடக்குமோ
என்றோ பார்த்த
ரயில் எரிப்புச் சம்பவம்.

சுந்தரிமணியன், புதூர்



# கைமாஞ்சி

இளமதிக்குத் தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. காலையில் இருந்து சரியாகச் சாப்பிடவில்லை. கணவன் மாறனும் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. தன் அம்மா சாப்பிட்டாளா என்று மட்டும் பார்க்கத்தெரிந்த மாறனுக்கு மனைவியை ஒரு வார்த்தை சாப்டியா? என்று கேட்கத்தோணுவதில்லை. இதை நினைக்கும்

பொழுது மனதில் எழும் துக்கத்தை அடக்கமுடியாமல் கண்ணீர் ததும்பியது. தனது பிறந்த வீட்டில் அப்பா தான் சாப்பிடவிட்டால் "டேய் சாப்டியா?" என்று கேட்காமல் ஒரு நாளும் சாப்பிட உட்கார்ந்ததில்லை. அவளுக்குப் பிடிக்காத சாப்பாட்டை அம்மா சமைத்தால் என்றால் சாப்பிடாமல் அடம்பிடிப்பாள். இதனால் அப்பா, அம்மாவை திட்டுவதோடு அவளைச் சமாதானம் செய்து,

"டேய் சாப்பிடுறா. அடுத்த முறை உனக்குப் பிடித்த சாப்பாட்டைச் சமைக்கச் சொல்கிறேன்."

என்று அப்பா சொல்லும்போது அம்மா சமையல் கட்டிற்குள் இருந்து அப்பாவையும் என்னையும் முறைப்பாள். அதையெல்லாம் கண்டு கொள்ளாது நான் அப்பாவின் கெஞ்சலுக்காகச் சாப்பிட உட்காருவேன். இந்த நினைவுகள் எல்லாம் நெஞ்சில் நிறைந்து என்னை ரணப்படுத்துகின்றன. இங்கு எவ்வளவு வேலை பார்த்தாலும் கண்டு கொள்ளாத கணவனும் மாமியாரின் செயல்களும் இளமதிக்கு வெறுப்பை மூட்டின.

திருமணம் செய்து வந்த புதிதில் இளமதி அத்தை, மாமா, ஆச்சி, மதினியின் பிள்ளைகள் என்று ஏழுபேருக்குச் சமைக்க வேண்டியிருந்தது. அத்தனை பேருக்குச் சமைப்பது சிரமமாக இருந்தாலும் மனமுவந்து செய்தாள். காலையில் ஒருவருக்குத் தேனீர், ஒருவருக்குக் காப்பி என்று ஒவ்வொருக்கும் ஒவ்வொரு விதமாகச் செய்ய வேண்டியிருந்தது.பெரிய மதினியின் பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடுவதில் ஆரம்பித்து இரவு தூங்கும்வரை வேலையிருக்கும். போதாத குறைக்கு வாரத்தில் மூன்று நாட்களாவது விருந்தினர் வருகை வேறு.

அந்த வீட்டில் இவளுக்கு இருந்த ஒரே ஆறுதல் ஆச்சி மட்டும்தான். இவளுக்கு ஒத்தாசையாக காய்கறி வெட்டுவது, பாத்திரம் கழுவிக்கொடுப்பது என்று இருந்தாள். இத்தனைக்கும் ஆச்சிக்கு வயது தொன்னூறுக்கு மேலிருக்கும். இரவு அனைவரும் உண்டபின் சாப்பிட அமர்ந்தவளுக்கு, மதினியின் மூத்த மகன் பிரசன்னாவின் வருகையால், அவளுக்கு இருந்த சாப்பாட்டையும் மாமியார் தனது பேரப்பிள்ளைக்கு வைக்கச்சொன்னதால் அதுவும் பறிபோயிற்று. இரவு ஒன்பதுக்கு மேல் இருந்த களைப்பில் இனிமேல் சமைத்துச் சாப்பிடவும் மனது மறுத்ததால் அப்படியே போய் படுக்கையில் விழுந்தாள். மாமியாருக்குத் தனது மருமகள் சாப்பிடவில்லையே எனத் துளிக்கூட கவலையில்லாது மகிழ்ச்சியுடன் பேரப்பிள்ளையிடம் அளவளாவிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த இளமதிக்குத் தன் மாமியாரின் மேலும் தன்னைக் கண்டு கொள்ளாத கணவன் மேலும் அளவிடற்கரிய கோபம் வந்து, அது தன்மீது ஏற்பட்ட கழிவிரக்கமாக மாறி அவளையும் அறியாமல் கண்ணீராய்க் கன்னங்களில் வழிந்தது. இந்த வெறுப்பு எல்லாம் தன் அப்பா, அம்மா மேலே திரும்பியது. விசாரிக்காமல் தனது அண்ணன் சொன்னார் என்பதற்காகத் தன்னைப் பாழும் கிணற்றில் தள்ளிவிட்ட தன் அப்பாவை எண்ணிக் கண்ணீர் உகுத்தாள்.

அன்று ஆடிஅமாவாசை. முந்தின நாள்தான் நல்ல நாள் என்று வீட்டையெல்லாம் மாமியார் துடைக்கச் சொன்னார் என்று வீடு துடைத்து, விளக்கு விளக்கி, சமையல் செய்து என்று நாள்முச்சூடும் வேலையிருந்தது. மறுநாளும் மாமியார்,

"இன்று ஆடிஅமாவாசை. வீடு துடைத்து, குத்துவிளக்கை விளக்கு. பாயாசம் வை" என்றவுடன்,

" நேத்துத் தானே அத்தை வீடு துடைத்து, விளக்கைச் சுத்தம் செய்தேன்" என்றாள். உடனே அவளது அத்தை,

"நேத்து சாப்பிட்டேன்னு இன்னைக்குச் சாப்பிடாமலா இருக்க.."

என்றவுடன் இளமதிக்கு அவளையும் அறியாமல் சுளீரென்று வந்த கோபத்தில் கண்ணிலிருந்து கண்ணீர் பொங்கியது. மாமியாரின் மேலிருந்த கோபம் ஒரு பக்கம், அவரின் பேச்சை எதிர்க்கவியலாத அறியாமை மறுபக்கம் என அழுகைதான் எட்டிப்பார்த்தது. அவ்வப்போது மாறனிடம் எரிச்சலாகவும் கோபமாகவும் வெளிப்படுத்தித் தனது ஆற்றாமையைத் தீர்த்துக்கொள்வாள். இதற்கெல்லாம் தீர்வு என்ன என்று யோசித்தவளுக்குத் தான் வேலைக்குப் போவதுதான் சரியான முடிவாக இருக்கும் என நினைத்திருந்தாள். ஒருநாள் மதியப்பொழுதில் போஸ்ட்மேன் வீசிய கவர் தனது எதிர்காலத்தை மாற்றப்போகிறது என்பது தெரியாமல், பிரித்துப் படித்தவளுக்கு மகிழ்ச்சியில் வாயடைத்துப் போனது. தனக்குப் பக்கத்து ஊரில் வேலை கிடைத்திருப்பதை அந்தத் தபால் பரிசாகக் கொடுத்திருந்தது. மாறனுக்கு அனுப்ப மனமில்லாவிட்டாலும் பணத்திற்காக அனுப்பி வைத்தான். தன்னைப்பற்றி புரிந்து கொள்ளாத கணவனையும் மாமியாரையும் தண்டிக்க இதைவிட வேறுவழியில்லையாதலால் தனக்கான கனவுகளைத் தேடி புறப்பட்டாள். இளமதி தனது மகளுடன் பக்கத்துஊருக்குப் புலம்பெயர்ந்தாள்.

தற்போது மாமனார் இறந்து, தனது கணவனும் மாமியாரும் மட்டுமே தனித்திருப்பதால் மாமியாரின் அதிகாரம் குறைந்ததோடு, வாயும் ஒடுங்கிப்போனது. இளமதிக்குக் கைமாஞ்சி போட்டதுபோல் தனது வாழ்க்கையின் பாதிநாட்கள் நிம்மதியிழந்து போனநினைவுகள் இன்னும் மனக்கண்ணில் நிழலாடுகிறது. இனிமேல் தான் தொலைந்து போன காலங்களை வசந்தமாக்கவும் முடியாது எனும்போது வரும் மகிழ்வான பொழுதுகளை அவர்களால் அழிக்கவும்முடியாது என்பது அவளுக்கு ரெக்கைகட்டிப் பறப்பதுபோல் இருந்தது.

தி.வள்ளி, திருநெல்வேலி



# உணர்ச்சிப் போராட்டம் ....

டெல்லி மாறுதலுக்கான உத்தரவு வந்ததிலிருந்து வீட்டில் நிம்மதியே போய் விட்டதாகத் தோன்றியது அனுவுக்கு.

வசந்த் தீர்மானமாக,'' டெல்லி கிளைமேட் அப்பாவுக்கு ஒத்துக்காது. நாம மட்டும் தான் போறோம் .அப்பாவுக்கு நல்ல முதியோர் இல்லம் பார்த்து ஏற்பாடு பண்ணிட்டேன்.உமாவும் பெங்களூர்ல ஹாஸ்டல்ல தான் இருக்கப் போறா.. அதனால அவள பத்தி பிரச்சனை இல்லை'' என்றான்.

''மாமா பாவங்க... முதியோர் இல்லத்தில எப்படி இருப்பார்? அத்தை இறந்து ஆறு மாசம் கூட ஆகல ...அவரே மனசு வருத்தத்தில் இருக்காரு... அவரை தனியா விட முடியுமா?''

''அனு உனக்கு சில விஷயம் புரியாது நான் தீர்மானம் பண்ணினா பண்ணினது தான். அப்பாவுக்கு சென்னைதான் வசதி. நீ இதுல எதுவும் வாதம் பண்ணாதே ''

''நம்ம கூட வேணாம்னா உமாவுக்கு பெங்களூர்ல ஒரு தனி வீடு பார்த்து கொடுத்துருவோம். தாத்தாவும், பேத்தியும் ஒன்னா இருக்கட்டுமே''

''அந்தப் பேச்சை விடப் போறியா.. இல்லையா? அப்பாவுக்கு கொஞ்ச நாள் ஒரு மாதிரி இருக்கும். அப்புறம் பழகிடும். பழக்கப்படுத்திக்க வேண்டியது தான். அவரோட சுமையை என் தோளில சுமக்க முடியாது'' கத்திவிட்டு அறைக்குள் போய் கதவடைத்துக் கொண்டான் வசந்த் .

வெளியே உட்கார்ந்திருந்த அருணாச்சலம் காதில் இவ்வளவும் விழுந்தது. தனக்கு கேட்கட்டும் என்று தான் மகன் இப்படி கத்திப் பேசுகிறான் என்று தோன்றியது. மனது வருத்தமாக இருந்தது.

மனைவி விசாலத்தின் படம் கண்ணில் பட, அழுத்தம் அதிகமானது. 'அவள் இருந்த போது எப்படி வசதியாக இருந்தேன்.என்னோட ஒவ்வொரு தேவையும் பார்த்து பார்த்து செஞ்சா. எல்லாத்துக்கும் மேல வாழ்க்கை மரியாதையாய் இருந்தது. வீடே என் பேச்சுக்கு அடங்கியிருந்தது நல்லா இருந்தவ பொசுக்குன்னு போயிட்டா. போன மகராசி கூடவே என்னோட மகிழ்ச்சி ,மானம் ,மரியாதை, எல்லாத்தையும் எடுத்துகிட்டு போயிட்டா 'என மனதுக்குள் கூறிக் கொண்டார்.

'உறவுகளை விட்டுட்டு தனியா முதியோர் இல்லத்தில் என்னால இருக்க முடியுமா? புது மனுஷங்களை என்னால அனுசரித்துப் போக முடியாது. மகனிடம் பேசிப் பார்ப்போம்' என்று நினைத்தார். அவனுக்கு தான் என்ன வந்தது? அம்மா இருக்கிற வரை ஒழுங்காகத் தானே இருந்தான் . ஒரு இனம் புரியாத பய உணர்வு அவரை ஆட்டி வைத்தது.

"தம்பி நானும் உங்களோடேயே டெல்லிக்கு வந்திடுறேனே. எனக்கு முதியோர் இல்லம் எல்லாம் சரிப்பட்டு வராது" என்று ஆரம்பித்தார்.

"அப்பா டெல்லி குளிர் உங்களுக்கு ஒத்து வராது . இங்க இந்த இல்லம் உங்களுக்கு வசதியாகத்தான் இருக்கும். உங்க வயசை ஒத்தவங்களோட நல்ல பொழுது போகும். முதல்ல வித்தியாசமா தெரிஞ்சாலும், போகப்போக பழகிடும். நாங்க இந்த வாரக் கடைசியில டெல்லி கிளம்புறோம். நீங்க நாளைக்கு ரெடியா இருங்க." அப்பாவின் முகத்தைக் கூட பார்க்காமல் சொல்லிவிட்டு போய்விட்டான். அனுவுக்கு மாமனாரைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

ஒரு வாரத்தில் கடகடவென வேலை நடக்க, சொன்னபடி அப்பாவை முதியோர் இல்லத்தில் விட்டு விட்டு வந்தான். பின் பெங்களூர் போய் உமாவையும் பார்த்துவிட்டு வந்தார்கள். வாரக்கடைசியில் டெல்லி கிளம்பி போனார்கள். மறுநாள் வசந்த் வேலையில் சேர்ந்துவிட, அனுவுக்கு சாமான்களை பிரித்து அந்தந்த இடத்தில் வைப்பதற்கு நேரம் சரியாக இருந்தது.

இடையிடையே மாமனார் நினைப்பும் வராமல் இல்லை. 'பாவம் பெரியவர் என்ன பண்ணுகிறாரோ.. மாத்திரை எல்லாம் ஒழுங்காக போட்டு கொள்கிறாரோ இல்லையோ... புதிய மனிதர்கள் புதிய இடம்'

உள்ளே வந்த வசந்த்" என்ன அனும்மா யோசனை பலமா இருக்கு?"

மாமாவை பத்திதான் யோசிச்சுகிட்டு இருந்தேங்க.. நீங்க பண்ணுனது சரியில்லைங்க. மாமா விஷயத்தில உங்க மனசு கல்லா போயிடுச்சு "என்றாள் ஆதங்கத்துடன்.

சட்டென முகம் மாறியது வசந்த்துக்கு "உனக்கு என் மனசு புரியணும்னா. 15 வருஷத்துக்கு முன்னாடி நடந்ததைச் சொன்னாத்தான் தெரியும்.. கேளு" என்று ஆரம்பித்தான்.

"நாங்க அப்ப கிராமத்தில் இருந்தோம். எனக்கு 15 - 16 வயசு இருக்கும். அப்பா அங்க வேலை பார்த்துட்டு இருந்தாரு. பெரிய சம்பளம் எல்லாம் கிடையாது. தாத்தா சொந்த விவசாயத்தில் கொடிகட்டி பறந்தாரு. இப்ப இருக்கிற சொத்துபத்து எல்லாம் அவர் சுய சம்பாத்தியத்தில் கடுமையா உழைச்சு வாங்குனது. பாட்டி ரொம்ப நல்லவங்க .அம்மாவும் அப்படித்தான். ஒரே பிள்ளைங்றனால எங்க அப்பாவை தாத்தா ஒண்ணுமே சொல்ல மாட்டாரு. எங்க அப்பாவும் பொறுப்பில்லாமல் இருந்தாரு .மனம் போனபடி பேசுவது... எல்லாரையும் பேச்சாலேயே புண்படுத்துவது.. யாரையும் எடுத்தெறிந்து தான் பேசுவார்"

தாத்தாவும், பாட்டியும் தான் என்ன நல்லபடியா வளர்த்தாங்க. எனக்கும் தாத்தா பாட்டின்னா உயிர். ஒரு நாள் வயலுக்கு அறுவடையை மேற்பார்வை பார்க்க போன தாத்தா பிணமாத் தான் திரும்பி வந்தார். நெஞ்சுவலி... அதுக்கப்புறம் வீட்டு சூழ்நிலையை மாறிப்போச்சு. தாத்தாவுடன் சந்தோஷமும் போச்சு. பாட்டி தான் என் ஒரே ஆறுதல். அவங்க என் பேரில் உயிரையே வச்சிருந்தாங்க."

"அப்பாவுக்கு பாட்டியே ஒரு பெரிய சுமையா தெரிஞ்சாங்க. வடக்கே வேணும்னே இடம் மாறுதல் கேட்டு வாங்கினாரு.. பாட்டிக்கு இந்த ஊரு ஒத்துக்காதுன்னு சொல்லி, முதியோர் இல்லத்தில் கொண்டு விட்டார். அந்த காலத்துல அது ஏத்துக்க முடியாத ஒரு செயலாக இருந்தது. நானும் அப்பாகிட்ட எவ்வளவோ போராடிப் பார்த்தேன். நானும் பாட்டியும் அந்த வீட்டிலேயே இருக்கிறோம்ன்னு சொல்லி அழுது கூட பார்த்தேன். அப்பா மனசு கல்லா இருந்தது. பாவம் பாட்டி வாடி போய்ட்டாங்க.மகனை எதிர்த்து ஒரு வார்த்தை கூட சொல்லல.. அந்த வாழ்க்கையை ஏத்துக்கிட்டாங்க. அப்புறம் ரொம்ப நாள் வாழவும் இல்லை. தாத்தா போன அடுத்த வருஷமே அவங்களுக்கு இறந்துட்டாங்க"

அவருடைய இழப்பு என்னை ரொம்பவே பாதிச்சது. அப்பா மேல ஒரு வெறித்தனமான கோபம் இருந்தது. வீட்டில் இருக்க பிடிக்காமல் ஹாஸ்டலுக்கு போயிட்டேன். எனக்குள்ள ஒரு நெருப்பு எரிந்துகிட்டே இருந்தது. பாட்டி அனுபவித்த அந்த வலியை அவருக்கு புரிய வைக்கணும். அவர் அம்மாவுக்குத் தான் செஞ்சது தப்புன்னு உணரனும். அதனால்தான் அவர் செஞ்சத அவருக்குத் திரும்பச் செய்யிறேன். இப்ப புரியுதா..." என்று கேட்க அனு அதிர்ச்சியில் உறைந்தாள்.

தன் கணவனின் மனதில் இப்படி ஒரு வலி... உணர்ச்சிப் போராட்டம் இருக்கும் என்று அனு கனவிலும் நினைக்கவில்லை. அடுத்த சில மணித்துளிகள் இறுக்கமான மௌனத்தில் கரைந்தது.

" உங்க வலி எனக்கு புரியுது. பாட்டியை நினைச்சு மனசு வருத்தமா இருந்தாலும் மாமா அவங்க அப்பா நடந்துக்கிட்ட மாதிரி நீங்களும் நடந்துகணுமா?"

"இல்ல அனு அவர மாதிரி மனசாட்சி இல்லாம நான் நடந்துக்க மாட்டேன். அவர் ஒரு காலகட்டத்தில் அவர் மனசார தப்பை உணர்ந்து திருந்தனும். அதான் இப்படி செஞ்சேன். மற்றபடி சீக்கிரமே தமிழ்நாட்டுக்கு பணி மாற்றம் வேண்டும்னு கேட்டுகிட்டிருக்கேன். அடுத்த பணியிட மாற்றம் வரும்போது அவங்க தருவதாய் சொல்லியிருக்காங்க."

அனு மனம் நிம்மதியானது மகிழ்ச்சியில் தன் கணவனின் கைகளை எடுத்து தன் கைக்குள் வைத்துக் கொண்டாள். மனதில் இருந்த நெருடல் மறைந்து ஒரு நிம்மதி மலர்ந்தது.

பா.சிவகுமார்

## பேரபேதம்

ஒரு முழம் மல்லி இருபது ரூபாயென
சொன்ன முனியம்மாவிடம்
ஒரு முழம் மல்லியும்
கொசுறாக இரண்டு ரோஜாக்களும்
வாங்கியதில்
பூத்துக் குலுங்கியது மனம்

தள்ளுவண்டியில்
காய்கறி விற்கும் பொன்னம்மாவிடம்
எடைக்கு கூடுதலாகவே
காய்கறி எடுத்துப் போட்டு
கறிவேப்பிலை, கொத்தமல்லியை
காசின்றி ஏராளமாக
எடுத்துக் கொண்டதில் ஏக மகிழ்ச்சி

தயிர் விற்கும்
தாச்சியம்மாவிடம்
கூடுதலாக இரண்டு கரண்டி தயிரைக்
கேட்டு வாங்காவிட்டால்
தயிரை போல
இறுக்கமாகும் மனசு


பல்பொருள் அங்காடியில்
ஒரு கோப்பைத் தயிரை
எழுபது ரூபாய்க்கும்
பழம் காய்கறிகளுக்கு
எடைக்கு கூடுதலாக இருக்கும்
ஒவ்வொரு கிராமுக்கும்
விலையிடும்போதும்
கைப்பையை கட்டணம்
செலுத்தி வாங்கும் போதும்
வங்கியட்டையை
தேய்த்துவிட்டு
வாய்மூடி வருகிறது
எளியவர்களிடம்
வாயாடிய வாய்



இரா.வெங்கடேஸ் குமார், மதுரை

## பெண்

நவரசம் யாவும் உன் வசிய விழியே
கவசமாய் என்றும் வளைந்திருக்கும் இமையே
கரிசல் காட்டினில் ஆடும் மரங்கள் போலே
காற்றினில் ஆடும் உன் கருங்கூந்தல் மேலே
காளையரின் மனதில் காதல் கோட்டையின்
அரசியே
வெட்கம் எனும் சின்னத்தில் வெற்றி என்றும் நீயே
இவ்வுலகம் உருவாக காரணமான சேயே!
குடும்பம் எனும் கூட்டை காக்கும் கடவுள் தாயே
அண்டத்தின் ரகசியங்கள் ஒரு சேர நீயே!
அறிவியலின் ஆயிரம் கண்ணிலும் படாமல்
மர்மத்தை மறைத்தாயே!!



# சரித்திர வேங்கையின் வரலாறு

சாவு தழுவாத பேராறு

மட்டு மண் மணம் கமழ தொட்டு நிமிர்ந்து

சந்ததி வாழ எட்டி நிமிர்ந்து

வீர்தீரம் புரிந்த வீரர்கள் ஏராளம்

முடிவுரை எழுத முடியாத அடிவானம் அவர்கள்.

நீண்டு ஓடும் நீர் வாவிகளும், நீலமேகம் வரை உயர்ந்து நின்ற பணியா சிகரங்களும். வளங்களை வனப்பாக்கி காட்சி தந்த இயற்கையும், நெல் வயல்களும், குறையில்லா நிறை செல்வமுமாய் திகழ்ந்த கிராமமே பகல்வாயில் பணிய மண்ணான மட்டுநகரில்

புல்லுமலை எனும் ஊர். சூசைமுத்து அன்னம்மா என்னும் தம்பதியினருக்கு ஈழத்தாயின் தவப்பயனால் 24 ஆம் திகதி ஆடித் திங்கள் 1966ஆம் ஆண்டு தரணியில் பத்தாவது தனயனாக மருத நிலத்தில் தாரகை ஒளிவீச தாய்மண்ணில் உதயமானான் கடைசி ஆண்மகனாகவும் அவருக்கு பெற்றோர்களால் இட்ட பெயர் அமலதாஸ் அவருக்கு அன்பு பரிமாற அழகான தங்கையும் பிறந்தது பாசத்துக்கு குறையில்லாமல் சகோதரர்கள், சகோதரிகள் உறவுகள் என்று செல்ல பிள்ளையாக வளர்ந்தார்.

இலகுவில் எதையும் கற்றறியும் திறனும் வல்லமையும் கொண்டவனாகவும் பறவைகள் பிடித்து அதனை பறக்கவிட்டு அளவில்லா ஆனந்தம் கொள்வதும் இவனுக்கு வேட்டை ஆடுவதிலும் நாட்டம் சிறு பராயத்தில்

புல்லுமலையில் வில்லாய் எழுந்து வீரியமாய் புறப்பட்ட வீரனின் சரித்திர வரலாறு இது சாகா வரம் பெற்றுவந்து சாமரம் வீசி சந்தனப் பேழையில் உறங்கும் உத்தமனின் உண்மைத்துளிகள்

எங்கள் வளத்தின் வனப்பு கண்டு அதை ஆக்கிரமித்து அங்கு வாழ்ந்த எம்மினத்துக்கு அட்டூழியங்கள் புரிந்து கொன்று குவித்து வந்த நேரம்

தன்னினத்தின் தாங்கொண்ணா துயரம் கண்டு சரிரம் துளைக்கும் அம்பாக விரைந்தார்கள் இளைஞர்கள் அந்த நேரத்தில் பல அமைப்புக்கள் இனத்தை காப்பாற்ற இளைஞர்கள் அணி சேர்ந்தார்கள் அதற்கு தலைமைப் பொறுப்பேற்று நின்றவர்கள் சோரம் போய் எம்மினத்திற்கு எதிராக ஏவப்பட்டார்கள் அப்போது உறுதியாக எந்த அற்ப சலுகைக்கும் சோரம் போகாமல் விடுதலைப் புலிகள் அமைப்பே இருந்தது அந்த அணியை தீர்க்கமாக தெரிவு செய்து இயக்கத்தில் இணைந்தவர் தான் கேணல் நாகேஷ் அண்ணா

எங்களுடைய விடுதலைப் போராட்டத்தில் காவியமான வேங்கைகளை தமிழர்களாகிய நாங்கள் போற்றி வணங்குவது எமது கட்டாய கடமையாகும் எங்களை வழி நடத்திய தளபதியின் இழப்பினால் எங்கள் கனவுகளில் சிதைவுகள் ஏற்படுகின்றது ஆனால் அந்த தளபதி வளர்த்து விட்ட போராளியால் அந்த சிதைவுகள் நிமிர்கின்றது எங்கள் இனத்திற்காக தன்னுயிரை ஈர்ந்த மறவர்கள் எல்லாம் காலம் உணர்ந்த அதிசய பிறவிகள் தீர்க்கதரிசியின் வழியில் நடந்த பிரதி விம்பங்கள் அவர்கள் தலைவன் இட்ட கட்டளையை ஏற்று அந்த பாதையில் உயிர் விடும் வரை பயணித்த வேங்கைகள் அவர்கள்.

சாதாரண மனிதப்பிறவிகளாக பிறந்து சரிரத்தை மண் தின்று அரித்தாலும் சரித்திரத்தை மனிதர்களாக சித்தரித்து நிற்கும் எம் மறவர்கள் சாதாரண வாழ்வு வாழ்ந்தவர்கள் அல்ல தினம் தினம் தன் இனத்திற்காக கனலென எரிந்து தீக்குழம்பானவர்கள் காலனை நித்தம் சந்திக்கும் பாக்கியம் பெற்றவர்கள் நித்தியமாய் தமிழர்கள் மனதில் அழியாமல் வாழும் காவியங்கள் எங்கள் மாவீரர்கள்.

களப்புக்கள் கலந்தோடும் எங்கள் மட்டக்களப்பு தெவிட்டாத தமிழ் பேசும் மட்டுநகரில் உருவான ஒரு தளபதி தான் எங்கள் நாகேஷ் அண்ணா அந்த பெரும் தளபதியின் பதிவினை எழுதுகோல் கொண்டு வரைந்திட முடியாது

பாயாத வேங்கை என்று இருந்ததில்லை- இது

**சாயாத வேங்கையின் சரித்திர வரலாறு**

இதம் தரும் இயற்கையும் சில்லென்ற காற்றும் சீர் வரிசையாக சிறப்புடன் திகழ்ந்த பெரிய புல்லுமலைக்கிராமத்தில் தனது ஆரம்பக்கல்வியினைக் கற்று படிப்பில் சிறந்து விளங்கிட உயர்கல்வியினை மட்டக்களப்பு மகாஜன இந்துக்கல்லூரியில் தனது கல்வியினை தொடர்ந்து கொண்டிருந்த பொழுது இந்த துடிப்பு மிக்க வயதினில் தமிழ் இனத்தினது பற்று ஆழமாக பதியத்தொடங்கியது அந்நேரத்தில் எம் மக்கள் சந்தித்த பேரவலங்களை நேரினில் காண்கின்ற போது இளம் மனம் கொதிப்படையத்தொடங்கியது எங்கள் மக்களையும் , எமது இருப்பை எப்படியேனும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் எழும் போது உண்மையான பற்றுடனும் ஒழுக்கத்தினை கடைப்பிடிக்கும் அற்புதமான தலைவனை கொண்ட அமைப்பாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளே நேர்மையுடனும் ஓர்மையுடனும் ஆதிக்க வாதிகளை அடக்கி கொண்டிருந்தார்கள்

விடுதலை உணர்வுடன் பெற்றோர்கள் உற்றோர்கள் அனைவரையும் பிரிந்து எம்மின மக்களை காத்திட களத்தில் வீறு கொண்டவர் 1986ஆம் ஆண்டு விடுதலை புலிகள் இயக்கத்தில் மட்டு 03 பயிற்சி முகாமில் தனது அடிப்படை பயிற்சியினை திறம்பட முடித்து விடுதலைப் புலியாக நாகேஷ் என்ற நாமத்துடன் எங்கள் மக்களில் விடிவுக்காக தன் உறவுகளின் பாசங்களை ஒதுக்கி விடுதலை வீரனாக வலம் வந்தார்.

மாங்கேணியில் ஆக்கிரமித்து மக்களை படாத பாடு படுத்திக்கொண்டிருந்த இலங்கை இராணுவ முகாம் மீது லெப்டினன்ட் கேணல் குமரப்பா தலைமையில் தனது முதலாவது தாக்குதல் 1986 ஆம் ஆண்டு நடுப்பகுதில் இவ் மோதல் இடம்பெற்றது பற்றுடன் பற்றிய துப்பாகியிலிருந்து எதிரியை நோக்கி பல ரவைகள் இராணுவத்தினரை கொன்றது. இது ஒரு வீரன் தனது முதலாவது களப்பதிவினை காலம் பதிவு செய்கின்றது .

மகோயா வீதி 07/08/1986 ஆம் ஆண்டு அமைதியாக

இருந்தது அந்த வீதியினூடாக அணிவகுத்து வந்த இராணுவத்தினர் மீது முன்னனி வீரனாக நாகேஷ் அண்ணா பங்குபற்றி ஐந்து இராணுவங்களை கொல்லப்பட்டதுடன் அவர்கள் கொண்டு வந்த சீன தயாரிப்பிலான T-56 இரண்டு ஆயுதங்கள் கைப்பெற்றப்பட்டது இது இவருடைய இரண்டாவது தாக்குதலாகும் .

அமைதிப்படை என்ற பெயரில் ஈழத்தில் வந்திறங்கிய இந்திய இராணுவங்கள் எமது மக்களின் இருப்பிடங்களை அழித்து இளம்பெண்களை கற்பழித்தும் கொன்றும் அட்டூழியங்கள் புரிந்து கொண்டிருந்த நேரத்தில் இவர்களுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று அவர்களால் 04 ஆம் மாதம் 1988 ஆம் ஆண்டு கோப்பாவெளியில் வைத்து இந்திய இராணுவத்தின் மீதான முதலாவது கண்ணி வெடித்தாக்குதலை தளபதி நாகேஷ் அண்ணா மிகவும் நுட்பமான முறையில் நிகழ்த்திக்காட்டினார் அதில் ஆறு இராணுவங்கள் கொல்லப்பட்டு பத்துப்பேருக்கு அதிகமானோர் படுகாயம் அடைந்தார்கள் கண்ணிவெடி தாக்குதலில் சிறந்து விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது .

பாரத தேசம் எம்மினத்திற்கு பல துரோகங்கள் புரிந்தது மட்டும் அல்லது தேசவிரோதிகளையும் உருவாக்கி எம்மினத்தை அழிப்பதற்கு பெருமளவிலான ஆயுதங்களை கையளித்து இதனால் எமது இயக்கத்தினருக்கும் எமது மக்களுக்கும் இழப்புக்களையும் மக்களைக் கடத்தி காசு பறிப்பதும் வதைப்பதுமாக அட்டகாசம் காட்டி திரிந்தார்கள் இவர்களுக்கு 1989/11/06 அன்று திருக்கோயில் மற்றும் தம்பிலுவில் முகாம்கள் மீதான தாக்குதலை லெப்கேணல் நீகன் அணியும் அம்பாறை மாவட்டத்தளபதி மேஜர் அன்ரனி அணியும் சுற்றி வளைப்புத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டார்கள் இதில் 100 பேர் கொண்ட அணிக்கு இடைநிலை தளபதியாக நாகேஷ் அண்ணா அவர்கள் பங்கு பற்றி இதில் நூறுக்கு மேற்பட்ட ஆயுதங்களும் பல தேசவிரோதிகளும் கொல்லபட்டார்கள்.

மட்டக்களப்பு பெரும் வளம் பொருந்திய நிலமான உன்னிச்சைப் பகுதியில் தேசவிரோதிகள் மீதான தாக்குதலிலும் இடைநிலை தளபதியாக பங்கு பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது . அதன் பிறகு மட்டக்களப்பு படுவான் கரை மாவடிமுன்மாரி பகுதியில் முகாம் அமைத்து பல பேர் கொண்ட அணியை வழி நடத்தி கண்ணி வெடித்தாக்குதல் என எதிரிகளுக்கு இழப்பினை ஏற்படுத்தினார் .

மட்டக்களப்பில் மாவடி முன்மாரி என்னும் படுவான் மறையும் கிராமமாக இருந்த கிராமத்தில் நாகேஷ் அண்ணனின் பாதம் பதியாத இடம் இல்லை என்று தான் சொல்லவேண்டும் அது மட்டும் அல்ல அந்த கிராமத்தில் வாழும் மக்கள் மனதில் இன்றும் ஆழமாக அடிமனதில் பதிந்த ஓர் வீரன் மாவடி முன்மாரியின் மறு பெயர் கூட நாகேஷ் என்றுதான் உரைக்கும் அந்த இடத்திற்கு இராணுவம் இறங்கினால் நாகேஷ் அண்ணனின் முகாமிற்கு ஆமி வந்திட்டானாமே என்று தான் மக்களுக்குள் கதை அடிபடும் அது மட்டுமின்றி அதன் அருகினில் வாழும் தமிழ் உறவுகளோடு அன்போடும் அரவணைப்போடும் பழகியவர் வறுமையில் வாடிய உறவுகளுக்கு பல உதவிகளை பேணி வந்தவர் எங்கோ இருக்கின்ற புல்லுமலையில் பிறந்து கொக்கட்டிச்சோலை மக்களோடு அன்பை பேணி எம்மினத்திற்காக வாழ்ந்த தளபதி எங்கள் நாகேஷ் அண்ணன்

1996 ஆம் ஆண்டு 19 கட்டையில் முகாம் அமைத்திருந்த விசேட அதிரடிப்படையினர் மீதான பதுங்கி தாக்குதலின் போது பதினாறு இராணுவங்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் ஆயுதங்கள் மீட்கப்பட்டது தளபதி நாகேஷ் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும் இந்த சண்டையில் இறந்தவர் போல் பாவனை காட்டிகிடந்த படி இராணுவ சிப்பாய் ஒருவர் துப்பாக்கி சூட்டில் காலில் காயமடைந்தார் நாகேஷ் அண்ணா இயக்கத்தின் தரப்பில் இரண்டு மேஜர் இரண்டு கப்டன் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

2001 ஆம் ஆண்டில் வெல்லாவெளியிலிருந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவத்தினருக்கு தளபதி நாகேசின் தாக்குதல் படையணியினர் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள் அதில் எவ்வித சேதங்களும் கணிப்பிட முடியவில்லை பல ஆயுங்கள் மீட்கப்பட்டது படையணியினருக்கு எவ்விழப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மட்டக்களப்பில் சவாலான முகாமாக அமைந்திருந்த வவுணதீவு இராணுவமுகாம் பெருமவிலான இராணுவங்கள் குவிக்கப்பட்ட முகாம் மீது விடுதலைப்புலிகள் 1996 ஆம் ஆண்டு இவ் முகாம் மீது தாக்குதலை நடத்தினார்கள் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவங்கள் பலியானார்கள் கருணாவினால் கட்டளை ஒன்று விடப்படாது களத்தில் நின்ற போராளிகளுக்கு அது முற்றுமுழுதாக அத்தலத்தை தக்கவைத்து கொள்ளவேண்டும் என்ற கட்டளை அதனால் இரவுச்சண்டை வெற்றிகரமாக அமைத்திருந்தது விடிந்ததும் இராணுவ போர் விமானங்கள் தாக்குதலில் விடுதலைப்புலிகளுக்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தியது இது கருணாவின் முட்டாள் தனமான கட்டளையால் ஏற்பட்ட இழப்பாகும் இதில் தளபதி நாகேஷ் முக்கிய பங்காற்றினார் இதில் 108 போராளிகள் ஈழத்தாய் அணைத்துகொண்டாள் லெப் கேணல் பாலேந்திர ,லெப் கேணல் மதனா என்ற தளபதிகள் வீரச்சாவினை தழுவிக்கொண்டார்கள் .

மட்டக்களப்பின் மூத்த தளபதியாக இருந்த

லெப்கேணல் றீகன் அண்ணாவிடம் வளர்ந்த போராளிதான் பின்னாளில் எங்களுக்கு கிடைத்த தளபதி நாகேஷ் அண்ணன் வாகரைக்கு ஒளிகொடுத்த கரும்புலி மேஜர் றெட்ணாகரன் என்ற கருவேங்கையை வளர்த்து. வாகரையில் மக்களை வாட்டி வதைத்தும் புதைத்தும் கொண்டிருந்த இராணுவ தளபதியை குறி வைத்து இந்த கரும்புலி வீரனை அனுப்பியவர் அந்த வீரன் அந்த கொடூர அரக்கனை அழித்து வீரகாவியம் ஆனான் இன்று கூட வாகரையின் சந்தியின் பெயர் றெட்ணாகரன் என்று தான் மக்கள் சொல்வார்கள் அங்கு எங்கள் நாகேஷ் அண்ணன் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்

அவரோடு நின்ற போராளிகளை ஒரு சகோதரனாக வளர்த்தவர் அவர் எப்படி மூத்த தளபதிகள் வளர்த்தெடுத்தார்களோ அதைப்போன்று அவரோடு அணிவகுத்து நின்ற போராளிகளையும் வளர்த்தார் தமிழ் மக்கள் மீது அதீத பற்றும் அலாதியான அன்பும் வைத்திருந்தார் அவர் போராளிகளோடு பேசும் பொழுதெல்லாம் அவர்கள் கடந்து வந்த துன்ப துயரங்களை சொல்லாமல் கடந்ததே இல்லை அடிக்கடி எங்கள் தானைத்தலைவனையும் உச்சரித்துக்கொண்டே இருப்பார் அதே போன்று வீரகாவியமான தளபதிகள் போராளிகள் வீரதீரங்களை கூறும்போது அந்த அற்புதமானவர்களை போல நாங்களும் மாறவேண்டும் என்ற கனவு போராளிகளுக்குள்ளேயே உருவாகும்.

போராளிகள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் தன்மை உடையவர் போராளிகளுக்கு சுவையான உணவு வகைகளை கொடுக்க வேண்டும் என்று அக்கறை காட்டுவார் கிராமங்களில் காலத்திற்கேற்ப உணவு வகைகள் வந்தால் அதை வாங்கி போராளிகளுக்கு சமைத்து கொடுத்து அகமகிழ்வார் போராளிகள் சாப்பிட முன் உணவு வகைகளை அவர் சுவைப்பார் அதில் எதுவும் குறைகள் இருப்பின் அதனை மறு தடவை விடாமல் இருப்பதற்கு சமையற்காரர்களை கண்டிப்பார்.

போராளிகள் சாப்பிட்டு கை கழுவி செல்லும் போது கைகளை சுத்தமாக கழுவி இருக்கின்றார்களா என சோதனைகள் கூட செய்வார் பெற்றோர்களை பிரிந்து வாழ்ந்து கொண்டிருந்த போராளிகளுக்கு ஒரு தந்தையாகவும் தாயாகவும் இருந்தவர் எங்கள் நாகேஷ் அண்ணா

இப்படி ஒரு தளபதி தன்னோடு இருக்கும் போராளிகளை நேசித்தால் எந்தப் போராளியாவது அவருக்கு பயபக்தியாக இருக்காமல் போவானா?அப்படியே பல போராளிகளை வளர்த்தவர் தான் எங்கள் நாகேஷ் அண்ணா

அவர் பேசும் போது போராளிகளுக்குள் நடந்த நகைச்சுவையை சொல்லுவார் அவரோடு இருந்த சில போராளிகளுக்கு வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை புரியாணி சாப்பாடும், ஐஸ் கிரீம் கொடுப்பாராம் போராளிகள் பாவம் என்று இதை செய்தாராம் ஏதோ ஒரு சூழ்நிலை காரணமாக ஒரு ஞாயிற்றுக்கிழமை ஐஸ் கிரீம் வரவில்லையாம் அப்போது போராளிகள் சொன்னார்களாம் என்ன சாப்பாடு ஐஸ்கிரீம் இல்லாத சாப்பாடு என்று அதன் பிறகு ஐஸ்கிரீம் இல்லாமல் செய்தாராம் ஏன் இதை சொல்கின்றேன் என்றால் சில வேளை இப்போது கிடைக்கும் உணவுகள் கிடைக்காமல் போகலாம் அதற்காக மனம் உடையாமல் நீங்கள் இருக்க வேண்டும் என்று சொல்வதாக சொல்வார்

அவரோடு ஓயாத அலை சமர்களில் மட்டக்களப்பு சென்ரர்கேம்பைச் சேர்ந்த ஓர் போராளி இருந்து இருக்கின்றார் அவர் விடுதலைப் புலிகளோடு இருக்கும் காரணத்தால் அவர்களின் வீட்டாரை இராணுவம் துன்புறுத்தி சித்திர வதைகள் புரிந்தார்களாம் அந்த போராளி தளபதியிடம் கூற அவர் சொன்னாராம் மட்டக்களப்பு சென்றதும் முதல் சண்டை உன் உறவுகளை துன்புறுத்தும் படையினருக்கு அடிப்பது தான் என வாக்களித்து இருக்கின்றார் அதே போல் மட்டகளப்பு வந்ததும் அந்த முகாமை அடித்து அதில் பல இராணுவங்கள் கொல்லப்பட்டது நாம் அறிந்தவைகள்.

வேம்பு மலரிலும் தேன் உள்ளது போல் வீரர்களின் நெஞ்சிலும் காதல் உண்டு தமிழ் மண்ணின் மீது அளவற்ற காதல் இருந்தாலும் அவர்கள் அடையாள சின்னமாக தங்களது பிரதி விம்பங்களை இந்த மண்ணில் விட்டுச்செல்ல ஒரு துளி ஆசை இருக்காமல் விடுவதில்லை ஆதலால் இரண்டாயிரத்தில் தனது இல்லற வாழ்க்கையில் இணைகின்றார் இந்த போரும் தளபதி தன் மனைவியை எவ்வாறு தெரிவு செய்கின்றார் என்று தெரியுமா ? தன்னைப்போன்ற தமிழ் உணர்வுள்ள பெண்ணை தெரிவு செய்கின்றார் அந்த பெண்ணும் தன்னினத்திற்காக ஆயுதம் ஏந்தி போராடிய பெண் ஒரு லெப்டினன்ட் கேணல் தரத்தில் இருந்த பெண்ணை இவரது மனைவியாக்கி கொள்கின்றார் அதில் இரண்டு அழகான துடிப்பு மிக்க பெரும் செல்வங்கள் தனது அடையாளங்களாக தந்திருக்கின்றார்..

கருணாவின் பிளவு நேரத்திற்கு முன்பாக இந்தியாவிற்கு சென்றிருந்தார் நாகேஷ் அண்ணன் அப்போது அவரை அவசரமாக வரும்படி கருணா பணித்தான் அவர் கொழும்பை வந்தடைந்ததும் கருணா நாகேஷ் அண்ணாவிடம் தொடர்பை ஏற்படுத்தி உன்னை பொட்டு போட்டுத்தள்ளுவதற்காக திட்டம் தீட்டி உள்ளான் கவனமாக என்னை சந்திக்கவும் என்ற போது சிந்தித்திருக்கின்றார் ஏன் என்னை பொட்டு அம்மான் போடவேண்டும் நான் இயக்கத்திற்கு என்ன துரோகங்கள் செய்தேன் இந்த விடுதலை இயக்கத்திற்கு நான் தவறு செய்திருப்பின் அதனை நிருபித்து என்ன

தண்டனை வழங்கினாலும் ஏற்றுக்கொள்ள நான் தயார் என்ற படியும் தான் எந்தவிதமான பிழைகளும் செய்யவில்லை என்ற நம்பிக்கையோடு நாம் தலைவரை சந்திப்பதே சிறந்த வழி தலைவன் என்றால் ஒருவன் அவர் பாதையில் நாம் நடப்பது தான் எமது இலட்சிய பாதைக்கு நன்மை கோலும் என முடிவு செய்து தலைவரை சந்திக்கின்றார் அப்போது அவர் வழமையாக எப்படி சென்று வருவாரோ அப்படியே நடந்ததாம் இதில் நாம் விளங்கி கொள்வது என்ன வென்றால் நாம் தவறு செய்யாமல் அச்சம் கொள்ளத்தேவை இல்லை என்று இதை போன்று பல தளபதிகளை கருணாவின் பக்கம் சாய்த்தவன் தான் கருணா என்று சொல்வார்

கருணாவின் கட்டளையை ஏற்க மறுத்த காரணத்தால் கோபம் கொண்ட கருணா குழு நாகேஷ் அண்ணாவை குறி வைத்திருந்தார்கள் அவர் வழமையாக மோட்டார் சைக்கிளில் வருவது வழமை அதனை நன்கு அறிந்து குறி வைக்கப்பட்டது அன்றைய தருணம் தீர்க்கமான முடிவினை எடுத்து உலவி இயந்திரத்தில் போராளிகளோடு பயணித்தார் அன்று அவர்கள் இலக்கின் படி அவருடைய மோட்டார் சைக்கிள் தாக்கப்பட்டது அதன் போது ஆம் லெப்டினன்ட் றோகிதன் என்ற போராளி வீரச்சாவை தழுவிக்கொண்டார்

அது மட்டும் அல்ல மட்டக்களப்பு கிருமிச்சை பகுதியில் லேப் கேணல் சாந்தன் அவர்களுடைய முகம் ஒன்று உள்ளது அங்கு நாகேஷ் அண்ணா இருப்பதை அறிந்த துரோகிக்கும்பல்கள் அவரை தாக்குவதற்காக திட்டமிட்டு வந்தார்கள் அதில் அவர்கள் பெரும் இழப்பையே சந்தித்து தாக்குதலை பொறுப்பேற்று வந்த துரோகி அதில் கொல்லப்பட்டார் /

2006 ஆம் ஆண்டு மாவிலாற்றில் சண்டை தொடங்கப்பட்டது அப்போது வன்னியில் கடமையை புரிந்து கொண்டிருந்த நாகேஷ் அண்ணா மட்டக்களப்பு வாகரைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் அங்கு பனிச்சங்கேணி காவல் அரண்கள் எவ்வாறு எதிரி தாக்கி அழிக்காதவாறு திட்டமிடலுடன் வடிவமைத்து கொடுத்தார் அப்போது செல் மழையில் நனைந்து கொண்டிருந்த போராளிகளுக்கு விடுமுறையாக எடுத்து அவர்களுக்கு குறி பார்த்து சுடும் பயிற்சியினை வழங்கி அவர்கள் மனம் தளராமல் போராட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார் .

மட்டக்களப்பிலிருந்து வன்னியை நோக்கி 2007ம் ஆண்டு விடுதலைப்புலிகளின் தலைவரின் பணிப்பின் பேரில் இறுதி யுத்தம் உக்கிரமாக நடைபெறும் என்ற தலைவரின் தீர்க்க தரிசனத்தால் கிழக்கில் இருந்த அனைத்து கட்டமைப்பு பீடங்களும் வன்னியை நோக்கி தங்களுடைய காலணிபடைகளை நகர்த்தினார்கள்.

அத்தோடு காயமடைந்த போராளிகள் 100க்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள் மருத்துவ உதவிகளுக்காக மருத்துவராக கடமை புரிந்த பொறுப்பாளரோடு வன்னியிலிருந்து திருகோணமலைக்கு கடல்வழி ,தரைவழியாக அனுப்பிவைக்கப்பட்டது.

உப்பாற்றை கடப்பதற்கு கேணல் ஜெயம் ,கேணல் நாகேஷ், மூத்த தளபதி மனோமாஸ்ரர் புலனாய்வு தளபதி கேணல் கீர்த்தி அவர்களோடு பல போராளிகள் தயாரான நிலையில் இருந்த அந்த நேரம் தளபதி ரமேஸ் அவர்களுடன் ஒரு தொகுதி போராளிகளும் வன்னி செல்ல இருந்தார்கள்.

உப்பாற்றை கடப்பதற்கு சிறு சிறு குழுக்களாக மரங்களுக்கு கீழேயும் ஆற்றங்கரை ஓரங்களிலும் தங்கி இருந்து திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டது அங்கே தளபதிகளான தலைமை செயலகம் மன்னர் சுரேஷ், நிருவாக சேவை கேணல் ஜெயம் ,கேணல் நாகேஷ், மூத்த தளபதி மனோமாஸ்ரர் புலனாய்வு தளபதி கேணல் கீர்த்தி,மருத்துவ துறை அமுதன் மணிவண்ணன் ,மகளிர் படையணி தளபதிகள் தலைமை செயலகம் ஒன்று கூடி திட்டமிடப்பட்டது

அங்கு வந்திருந்த காயப்பட்ட போராளிகளுக்கு மருத்துவ போராளிகள் தவறாது ஊசிகள் மருந்துகள் என நன்கு கவனிக்கப்பட்டது நீண்ட ,கால் நடையாக வந்ததினால் மாசுபட்ட குடி நீர் ,உணவுகளால் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டார்கள் அவர்களுக்கு ஒழுங்காக சிகிச்சைகள் அளிக்கப்பட்டது உப்பாற்றில் அருகில் இருந்ததால் அங்கு மீன்கள் பிடித்து சோறு சமைத்து சாப்பிட்டோம் அதில் வயிற்று காயம் பட்ட போராளிகளுக்கு கோதுமை மா பிட்டு தான் சாப்பிட வேண்டும் என்ற நிலையில் நாகேஷ் அண்ணா வேவு புலிகளை அனுப்பி பல சிரமங்களுக்கு மத்தியில் பெற்று கொடுத்திருந்தார்

கேணல் நாகேஷ் சகல நடவடிக்களைகளையும் மேற்கொண்டு உப்பாற்றிலிருந்து தம்பலகாமம் ,கொழும்பு பாதை ,கடவை பாதை ,தியாவானம் ,புல்லுமேட்டை கடற்கரை வழியாக நீண்ட கொடிய நடைப்பயணத்தில் திட்டமிட்டு பொறுப்பேற்று அவர்களோடு பழைய அனுபவமிக்க போராளிகளையும் இணைத்து நன்றாக சூழ வைத்து கதைத்தார் இந்த பயணத்தை இலகுவாக்குவதற்கு நகைச்சுவை மிகுந்த போராளிகளையும் அறிமுகப்படுத்தினார் .நீங்கள் எல்லோரும் தம்பலகாம் சென்றடைந்தால் வெள்ளை பிட்டும் இறால் கறியும் தருவேன் எனக்கூறி எல்லோரையும் உளவியல் ரீதியாக மிகுந்த நம்பிக்கை ஊட்டி பெண்போராளிகளையும் ,காயப்பட்ட போராளிகளையும் கால்கள் இழந்த போராளிகளையும் நன்கு உற்சாகப்படுத்தினார்

ஆடி மாதம் இரவு ஒன்று தொடக்கம் நான்கு மணி

வரை உப்பாற்றிலிருந்து அறுநூறு போராளிகள் வரை இரண்டரை மையில் நீளமான தொடர் நடையில் கடவையை ஊடறுத்து வேவு புலிகள் பின்னால் நாகேஷ் அண்ணா செல்ல அவரை பின்தொடர்ந்து போராளிகள் சென்றார்கள்.சென்ற சில நிமிடங்களில் எஸ்.எல்,ஏ ஆமியில் முட்டுப்பட சிதறிய படி படையணி பின்னகர்ந்து மீண்டும் உப்பாற்றிலிருந்து முஸ்லிம் கிராமங்கள் ஊடாக பரந்த வயல் வெளிகள் குடலைப்பருவத்தை அடைந்திருந்த நேரம் வயல் முழுக்க நீரும் சகதியுமாக இருந்தது.இலங்கை இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்திருந்த காரணத்தினால் எஸ் .டீ எப் ,ரோந்து படையணிகள் பதுங்கி தாக்குதல் படையணிகள் என விடப்பட்டிருந்தது அதையும் தாண்டி எங்களது படையணி தம்பலகாமம் வயல் வெளியில் போய்க்கொண்டிருந்த பொழுது எங்களை எதிர் பார்த்திருந்த எஸ்.எல் .ஏ குழு எங்களை தாக்கியது நாங்கள் சகதிக்குள் பதுங்கினோம் முன்னே சென்ற போராளிகள் கலைந்து எங்களோடு இணைந்தார்கள் எங்களோடு வீர தீரம் கொண்ட அனுபவமிக்க போராளிகள் அவர்களுக்கு பதில் தாக்குதல் கொடுத்து அவர்களை களைப்படைய வைத்தார்கள்.எங்கள் படையணி தம்பலகாமம் கொழும்பு பாதையை கடக்கும் முன்னர் நாகேஷ் அண்ணே சொன்னது போல படையணி தம்பலகாமம் வந்தடைந்ததும் அங்கு குழையல்சோறு கிடைத்திருந்து அதை அவர்கள் அவசர அவசரமாக உண்டார்கள் உப்பாற்றைகடப்பதற்கு தோணி பற்றாக் குறையால் விடியத்தொடங்கி விட்டாது அதனால் இராணுவம் தங்களது படையணியை தாயார் நிலையில் வாய்த்த வண்ணம் இருந்தார்கள் விசேட அதிரடிபடையினரும் மோட்டார் படையணிகள் ரோந்து நடவடிக்கையில் இருந்தார்கள் எனவே நாகேஷ் அண்ணா வழமை போல் போகாது சிங்கள மக்கள் குடியிருப்புக்கள் ஊடாக செல்ல முடிவு செய்தார் அதில் உள்ள காவலரண்களை தாக்கி அழித்து திகைப்பு தாக்குதல் கொடுத்து செல்ல நேரிட்டது அதனால் போராளிகளை கலைத்து இரு பக்கமும் உள்ள காவலரண்களை அழித்து கொழும்பு ரோட்டில் இரு முனைகளிலிருந்து வந்த பீடா படையணியை சுட்டுத்தள்ளி அருகில் உள்ள கட்டளை குளத்திற்கு சென்றோம் .அந்த கடவையை கடந்து கொழும்பு பாதையை கடந்ததும் பீடா அணியிலிருந்து இடது பக்கமாக கடும் எதிர் தாக்குதல் வந்தது அப்போது நாகேஷ் அண்ணா அவருடைய MIG துப்பாகியால் சுட்டுக்கொண்டிருந்த பொழுது அவருடைய நெஞ்சில் படுகாயம் அடைந்தார் உடனே முதல் உதவிகள் கொடுக்கப்பட்டு அருகில் இருந்த மலை அடிவாரத்துக்கு தூக்கிவரப்பட்டார் சிறந்த மருத்துவர் இருந்த படியால் நாகேஷ் அண்ணனை காப்பாற்றி கொள்கின்றார்கள் விடுதலை இயக்கத்தில் எப்படிப் பட்ட பெரும் காயங்கள் என்றாலும் மனம் தளராமல் சிகிச்சை அளிக்கும் திறன் கொண்டவர்களாவே வளர்க்கப்பட்டு இருந்தார்கள். நாகேஷ் அண்ணா அவர்களுக்கு குருதி பெருக்கெடுத்ததால் மூச்சி திணறல் ஏற்பட்டது மருத்துவர் நன்கு சோதனை செய்த பின்னர் சரியான முறையில் சிகிச்சை வழங்கபட்டது. அந்த தாக்குதலில் ஒரு போராளி வீரச்சாவை தழுவியதால் அவரை அம்மண்ணில் விதைத்தார்கள் .

அவர்களை இராணுவம் முற்றுகை இட்டிருந்தது அவர்கள் மூன்று அணிகளாக பிரிந்து தியாகவனம் நோக்கி நகரத்தொடங்கியது படையணி அவர்களை எதிர்பார்த்திருந்த இராணுவம் பொலிஸ் விசேட அதிரடி படைகளை வீரம் பொருந்திய போராளிகள் வைத்து தளபதி நாகேஷ் அண்ணா புன்முறுவலுடன் வழி நடத்தி படையணியை வன்னி நோக்கி நகர்த்தினார். திட்டங்களை மிக கட்சிதமாக தீட்டி போராளிகளை திறம்பட வழிநடத்திய எங்கள் பெரும் தளபதி நாகேஷ் அண்ணா .இறுதி கணம் வரை இந்த வேங்கை அசையாத மலையாய் நின்று எதிரி படைகள் மட்டும் அல்லது உலக இராணுவத்தோடு ஒருமையோடு பாய்ந்து ஒரு தலைவன் வழியில் கம்பீரமாய் நடந்த புலி எங்கள் மட்டு தளபதி நாகேஷ் அண்ணா

ஆனந்தபுரத்தினிலே அசையாத அரணாக நின்று களமாடிய தளபதிகளை இரசாயன குண்டுகளினால் வீழ்த்தியது இலங்கை இராணுவம் அதில் பல சரித்திர நாயகர்களையும் நாட்டின் நாளைய நாயகர்களையும் நாங்கள் இழந்தோம் அதில் எங்கள் பாசமிகு தளபதியும் போராளிகளை அன்போடு அரவணைக்கும் தாய் தந்தையாக எம்மை காத்து வந்த நாகேஷ் அண்ணனும் மூச்சி இழந்து போன போது நாங்கள் பேச்சு இழந்து போனோம் எங்கள் இனத்தின் சுவடுகளாக எங்கள் தளபதிகளின் வரலாறு வாழ்கின்றது எங்கள் தமிழ் குடியில் ஜனித்தவர்களின் வரலாற்றினை கதைகளிலே படித்தோம் சுவைத்தோம் மார்பு தட்டி நிமிர்ந்தோம் நாங்கள் அறியும் படியும் காணும் படியும் பல சாதனைகளை செய்து ஈழத்தின் கருவறைக்குள் உறங்கிக்கொண்டிருக்கும் உன்னதங்களின் தியாகங்களை எடுத்து இயம்புதலில் அடுத்த தலைமுறையினர் இந்த அழியாத அற்புத புருசர்களின் வீரதீரங்களை வரலாறாக படிக்க வேண்டும். இன்றைய சமுதாயம் எங்கள் வீரர்களின் வரலாற்றுக் கதையினை கற்றுக் கொடுக்க வேண்டும் இது எமது இனத்தைக் குழப்புவதற்காக அல்ல தன் இனத்திற்காக தங்களின் சுகபோக வாழ்வினை விட்டெறிந்து விடுதலையை நோக்கி வீறு கொண்ட மறவர்களின் வரலாற்றினை அவர்களால் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டியவர்களே எங்கள் மறவர்கள் எப்படியெல்லாம் வாழ்ந்து மண்ணிற்கு விதையாகி இருக்கின்றார்கள் என்பதை தமிழர்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியவைகள்.

கவிஜி

## ஒரு பறவை விழிக்கிறது

வழி நெடுக ஏறும் போதே
ஓர் இறங்குதல் உணர்ந்தவன்
எட்டிப் பிடித்த வானத்தை
வட்டமடித்து பூமியாக்க
தெரியும் அவனுக்கு
நட்சத்திர பூரிப்பு
நிலா சூரிய வனப்பு
பிரபஞ்ச துகள் என
அவன் ஒளிக்குள் துளியாகி
நெடுங்காலத்தை
கொண்டிருக்கிறான்
காற்றைத் தின்ன தெரிந்தவனுக்கு
கண்கள் மூடியும்
காட்சிகள் இருக்கின்றன
உடன் வந்த பறவைக்கு
உயிரூட்டி சிரிக்கிறான்
உள்ளிருக்கும் உயிருக்குள்
ஒரு பறவை விழிக்கிறது
ஓய்வில்லை ஒளியவுமில்லை
அவன் மலையில் அமர்ந்திருக்கிறான்
அவன் மேல் மலையும் அமர்ந்திருக்கிறது...!



.க. புனிதன்

## என் இனிய ஆடே

என் இனிய ஆடே
போர்களமான உலகத்தில்
நீயும் நானும்
ஒருவருக்கு ஒருவர்
அன்பு வைத்துஉள்ளோம்
விற்கப் படும்
வாங்கபடும்
பொருள் சந்தையில்
அன்பை செய்கிறோம் நாம்
அணு விதைக்கும்
வயலில்
என் இனிய ஆடே
நீ திங்க
சணப்பை விதைக்கிறேன் நான்
ஏதோ வெறுமையாய்
உணர்ந்த நாளில்
என் இனிய ஆடே
உன்னை மேய்க்கும் போது
அன்பு தான் குறை
என்று உணர்ந்தேன் நான்

மெய்யன் நடராஜ்

# தேளெனக் கொட்டும் தேயிலை

*(இரட்டை மணிமாலை)*



*கொட்டும் மழையில் குளிர்தாங்கிக் கண்களை
வெட்டும் இடிமின்னல் வேறுதாங்கி – ஒட்டுத்
துணியுடுத்தி தேயிலைத் தோட்டத்தில் நித்தம்
பணிசெய்தும் முன்னேறார் பார்.*

*பார்ப்பதற் கென்றும் பரிதா முடனுளப் பைங்கிளிகள்
நீர்த்துளி தேக்கி நிறைத்த விழிகளின் நீள்துயரம்
சீர்மிகு ஆற்றில் சிதறி வழிகிற செம்புனலாய்'
ஓர்த்தடை யின்றி உவகை யொடுதினம் ஓடிடுதே!*

*ஓடிடும் வெள்ளம் உறங்கிடா தோடுதல்போல்
வாடிடும் மக்களின் வாட்டமும் – ஓடியே
போய்விடின் வாழ்க்கையில் பூக்காலம் பூண்டதை
வாய்விட்டுப் பாடுவர் வாழ்த்து.*

*வாழ்த்து மழைதனில் வாழ்வை நனைத்திட வானமின்றி
வீழ்ந்து கிடப்பவர் வெற்றிக் கனவுகள் வேர்பிடிக்கச்
சூழ்ந்த வறுமையும் சுட்டுப் பொசுக்கிய சூததனால்
காழ்ப்பு படிந்தவர் காட்சி உயர்ந்திடக் காண்பதெங்கே!
★காழ்ப்பு – தழும்பு*

*எங்கே இவர்கள் எதிர்காலம் மாறிடின்
அங்கே தமக்கான ஆதாயம் – இங்கே
குறைந்திடு மென்றே குடத்துள் விளக்காய்
மறைப்பவர் நெஞ்சமோ மாசு.*

*மாசுளங் கொண்ட மனிதரி னாலே மதியிழந்து
வீசிடுங் காற்றும் விலகியே செல்லும் விதிவசத்தால்
தேசியம் காக்கத் தினசரி கொய்யும் திரவியத்தால்
ஆசிய நாட்டின் அடிமைக லானார் அழுவதற்கே!*

அழுபவர் வாழ்வின் அடிப்படைத் தேவை
இழுபறி யானதை எண்ணி – எழுகவே
என்றோர் இதழ்களை இங்கே திறந்திவர்க்காய்
முன்சென்ற தாரோ முழங்கு.

முழங்கிடும் சங்கொலி முன்பெழுந் தாய்மார்
முனங்குகின்ற
குழந்தைகள் உண்பதற் குற்றவை செய்தே
கொடுத்துவிட்டு
பழந்துணி யாகியப் பாவாடைக் காக்கப்
படங்குகட்டி
கொழுந்தினைக் கொய்திடக் கூடையை தாங்கிக்
குமுறுவரே!
★படங்கு - தார்ப்பாய்

குமுறிடு வார்தம் கொடுமைகள் மாற்றார்
அமுக்கியே வாசிக்கும் ஆட்கள் - கமுக்கமாய்
ஏய்த்துக் களித்திட ஏமாளிக் கூட்டமாய்
வாய்த்ததென் றெண்ணிடு வார்!

எண்ணுவ தெல்லாம் இயல்புட னோர்நாள்
இறைசெயலால்
கண்ணெதிர் வந்தே கரஞ்சேரு மென்றக்
கனவுடனே
உண்பதற் கில்லா துருகிடும் போதும் உறுதியொடு
மண்தனில் வேர்வை மழைதனைச் சிந்தும்
மலையகமே!

மலையக மக்கள் மனங்களில் நீங்கா
அலையெனத் துன்பம் அடிக்கும் – தலையினில்
என்றோ தவறாய் எழுதிய வாசகம்
ஒன்றிவரைச் சாய்த்திட்ட ஊறு

ஊறுகள் தாங்கி உழைப்பவர் வாழ்வில்
உயர்வுமின்றி
நூறுகள் கைக்குள் நுழைவதற் காயே
நுணங்கியழும்
ஆறுகள் பாயும் அழகிய நாட்டின் அடிமையென
மாறுத லில்லா மடமைக ளாயே மடிபவரே

மடிந்தமுன் னோரின் மதியிழப் பாலே
விடியலை காணா விழுதாய் - இடிந்த
மனத்தோ டுழைத்தும் மறுமலர்ச்சி யில்லா
இனத்தவ ராகின ரிங்கு

இங்கிவர் கொய்யும் இளந்தளிர் கொண்டு
எழிலுறவே
தங்கிட விட்டுத் தமதுயர் விற்காய் தனித்துவமாய்த்
தொங்கிய வாழ்வைத் தொடக்கிய யாரோ
துயர்படிந்து
மங்கிடச் செய்த மறைமுகச் சூழ்ச்சி மலையகமே

மலையக மிங்கே மலைபோ லுயரத்
தலையென நின்றத் தமிழர் - கலையுடன்
தேயிலைக் காட்டைத் திரவிய மாக்கியும்
வாயிலா துள்ளார் வறண்டு

வறண்டவர் வாழ்வை வனப்புள தாக்க
வகையுமின்றி
நிறங்களை மாற்றும் நிகழ்வுள சீவன்
நிலையுடுத்து
திறமுடன் ஏய்த்துத் திரிகிற வர்கள் திமிங்கிலத்தின்
பிறப்பென வாகிப் பிழிந்திவர் வாழ்வைப்
பிதுக்கினரே

பிதுக்கிய வர்கள் பிடுங்கியச் செல்வம்
பதுக்கிய நாட்டின் படிகள் - ஒதுக்கியே
வைத்து உணர்வுகள் வாட்டி மலையகத்தில்
நைத்தன ரன்பாய் நடித்து



**சே கார்கவி கார்த்திக்**


# நிழலொரு அச்சாணி

தனிமரம் தோப்பாகாது எனக்கூறி விடைப்பெற்ற
அப்பனின் பாத்த்தின் முன்னே நூறு விதை
கொண்ட கனியின்
அங்க பிரதசனம்....
நிழல்களை தேடிடும் வெளையில்
உதிர்ந்த இலைகொண்ட கிளைக்கு
இறகினை படரச்செய்கிறது
முந்தைய நாளில் முட்டைக்குள் உறங்கிய
பறவையொன்று....
இரு முதுகுகளை தாங்கி
காதல் உரசலில்
ஒவ்வொன்றாக உதிரத்தொடங்கின
மலர்களாய் இலைகள்....
மரங்கொத்தியிட்ட முத்தமெல்லாம்
கனுவாக கண்ணசைத்து நிற்கின்றன
மரத்தில்
எதிரெதிர் மரங்களின் வாக்கு மூலம் இது.....
புல் பார்த்து மரம் ஏங்கிட
மரம் பார்த்து புல் ஏங்கிட
இரண்டையும் இணைய வைக்கிறது
மரத்தினை நிழலால்
புல்லினை மழையால் நனைத்த
இயற்கையொன்று....!

**ச.ஆனந்தகுமார்**

# தாளிடப்படாத நாட்குறிப்பு

நாட்குறிப்பின் ஆரம்பமும் முடிவும்
உன்னிடத்திலேயே சரணடைகிறது..
என் எல்லைகளில்லா முடிவற்ற வானம்..
உனக்கென மட்டுமே சுற்றுகிறதென் பூமி..
யாமத்தில் நரம்புகளுக்குள் வசிக்கிற குளிர்..
சூரிய கதிர்களுக்குள் ஊடுருவும் வெயிலோன்.
பச்சையம் நிரப்பி பூக்கள் செய்கிறாய்
கண்ணீர் நிரப்பி சருகாய் மிதிக்கிறாய்
மகரந்த அலரி சேர்த்துக்கட்டிய மாலை நீ
நெய்தல் பாலைத்திணைகளின்
உரிப்பொருட்களுக்குள் கூடு பாய்கின்றாய்
கைப்பிடி இல்லாத கத்தி நீ
ஊடலறிவித்து எப்படித்திரும்பினாலும்
குத்தி மனதை ரணமாக்குகிறாய்
தாழிடப்படாத என் கைக்கிளை
நாட்குறிப்புக்கள் உன்னையே தேடி
சரணடைந்து துடிக்கின்றன..



Poem by: S.FAIZA ALI
எஸ். ஃபாயிஸா அலி.
ஆங்கிலத்தில்:அனாமிகா ரிஷி

## வசீகர மொழிகாவி

*அறைந்து மூடிய சாளரத்தோரமாய்*
சிலந்திகள்
சித்திரம் வரையத் தொடங்கியவேளை..
வந்தமர்கிற
ஹம்மிங் பறவையின்
மெதுமை படர்ந்த
கூரலகு சிந்துவது
எந்தப் பூவின் மகரந்தமோ..
கண்ணாடி மணக்கிறது.
காற்றாடி போல இடைவிடாது சுழல்கிற
அதன்
மெல்லிய சிறகசைவினிலே
ஊதித் தள்ளுகிறது..
பெரும்பெரும் பாறைகளை.
உதிர்ந்த துகள்கள்
ஒவ்வொன்றுமேயதன் வசீகரமொழி
காவிப் பறக்கின்றன..
பரிபூரணமாய்.
குளமுழுதும்
அழகழகாய் பூத்து மடியுது குறுக்கலைகள்.
ஆனாலும்
வருந்துதலை மட்டுமே அவாவியபடி..
மேலுமிறுக விடுகிறாள்
சாரளங்களை..!
எங்ஙனம் முனையலாம்..
ஒரு முறை தீண்டிய புற்றினை
மறுமுறையும் சீண்டிட...?

## THE LURE OF LANGUAGE

*The time when the spiders began*
*sketching at the corner of window banged shut.....*
*Wonder the pollen of which flower*
*the stroking sharp beak of the*
*humming bird alighting*
*sprinkles.....*
*The glass smells fragrant.*
*In its soft swing of the wings*
*that sway unending like the fan*
*blows away*
*rocks massive.*
*Each and every spec fallen*
*start flying*
*in pursuit of their own language*
*alluring*
*All over the pond*
*Bloom and disappear*
*circular waves.*
*Yet*
*Pursuing pain alone*
*she lets the windows*
*shut tighter*
*How to attempt*
*meddling with the snake-hole*
*that we had once felt.*



# விளம்பரமே வாழ்க்கை!

நல்ல மாடு சந்தையில் விலைபோகும் என்றொரு பழமொழி. மாட்டை வாங்குபவன்தான் மாட்டின் வாய்க்குள் விரலைவிட்டு பல்லைப்பிடித்துப் பார்த்து மாட்டின் தரத்தை அறிவான். மாட்டை விற்பவன் மாட்டின் வாயைத் திறந்து அதன் பல்லைக்காட்ட மாட்டான். அதேமாதுரி சந்தையில் காய்கறிகளை கூறுகட்டி விற்கும் வயோதிகப் பெண்மணி கூட கூவிக்கூவி விற்கமாட்டாள்.

அவள் காய்கறிகளின் தரம் என்னவென்று அவளுக்கு புரியும். அந்த தன்னம்பிக்கைதான் அவளை கூவி விற்கும் அவசியத்தை அவளுக்குத் தரவில்லை. ஆனால் இப்போது வியாபாரம் எல்லா இடங்களிலும் நுழைந்து விட்டது. திருமணம் கூட வியாபாரம் ஆகிவிட்டது. முன்பெல்லாம் பெண்வீட்டுக்கு பெண்ணைப்பற்றி கேள்விப்பட்டு மாப்பிள்ளை வீட்டார் தேடிச் சென்று பெண் கேட்பார்கள். இப்போது பெண்ணையும் ஆணையும் சந்தைப்படுத்தும் வியாபாரம் வந்துவிட்டது.

பண்டைய காலங்களில் அரச குடும்பங்களல் மட்டுமே சுயம்வரம் நடக்கும். ஏலம்விட தேதி அறிவிப்பதுபோல் அரசன் தன்மகளின் திருமணத்துக்காக சுயம்வரத்தை அறிவிப்பான். ஏலம் எடுக்க வருபவர்களைப்போல

பலநாட்டு அரசர்கள் பங்கேற்பார்கள். ஏலத்தில் தனக்கு வேண்டியது கிடைக்கவேண்டுமானால் அதிகப் பணம் இருக்கவேண்டும். சுயம்வரத்தில் இளவரசியை மணக்க உடல்வலிமை மற்றும் புகழ் போன்ற மூலதானம் இருக்க வேண்டும். அது ஒருமாதிரியான விளம்பரம்.

அது முடியாட்சியில் என்றால் மக்களாட்சியில் எல்லோரும் இந்நட்டு மன்னர்கள். அதிலும் ஆணும் பெண்ணும் சமம். அதனால் ஆண் பெண் இருவருக்கும் சுயம்வரம் நடக்கிறது. சுயம்வரம் நடக்கும் அரண்மனையாக திருமண தகவல் மையங்கள். சீதையின் சுயம்வரத்தில் வில்தான் தூண்டில். தூண்டில் போடத்தெரிந்த ராமன் சீதையை அடைந்தான். ஒரே ஒரு வாய்ப்பாக வில்மட்டுமே இருந்தது.

இன்றைய இராமன்களுக்கும் சீதைகளுக்கும் ஏகப்பட்ட வாய்ப்புக்கள். ஒரே வில் என்றில்லாமல் சீதைகளும் ராமன் வில்லை வளைக்க வேண்டுமே என்று கவலயடைய வேண்டியதில்லை. ராமன்களுக்கும் வில்லைத்தான் ஒடிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடும் இல்லை. எந்த ஆயுதத்தை வைத்து எந்தப் பெண்ணை மணக்கவேண்டும் என்று ஆண்களும் எந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற பெண்களும் தீர்மானிக்கிறார்கள்.

நவீன ராமன்களுக்கும் சீதைகளுக்கும் ஏகப்பட்ட வில்களும் தன் வலிமைக்கேற்ப வளைக்கக் கூடிய வில்களாக படிப்பும் தொழிலும் துணைநிற்கின்றன. இப்போது சங்ககாலமும் நிகழ்காலமும் சங்கமிக்கிறது. சங்ககாலம் போல் காந்தர்வ திருமணமும்

நடக்கிறது. நிகழ்காலத்தில் பாரம்பரியத்தை மறக்காதபடி திருமண மையங்களின் உதவியால் சுயம்வரமும் நடக்கிறது. வேண்டமென்றால் வேட்டியும் புடவையும்

கட்டிக்கொள்ளலாம் இல்லையென்றால் கோட்டும் சூட்டும் போட்டுக் கொள்ளலாம்.

இப்படி நான் சொல்லவில்லை. கூடுவாஞ்சேரியிலும் கும்மிடிப்பூண்டியிலும் வசிக்கும் என் நண்பர்களே சொன்னார்கள். இந்த விளம்பரக் கூத்து இப்போது விஸ்வரூபம் எடுத்தாடுகிறது. அதன் திவ்விய தரிசனத்தை கண்குளிர கடந்த முறை இந்தியா சென்றபோது கண்டேன். தூத்துக்குடி விமானநிலையத்தில் இறங்கி மகிழுந்தில் திருநெல்வேலி சென்று கொண்டிருதந்தேன். நெல்லையை நெருங்கியதும் பெரிய விளம்பரப்பலகை என் கண்ணில் பட்டது.

அதில் முறுக்கு மீசையுடன் ஆஜானுபாகுவானாக ஒருவரின் படம். தென்காசி தென்னவன் என்பது அவர் பெயர். 75வது பிறந்தநாள் விழா. அவரே அதை பெரிதாக இல்லாவிட்டாலும் அவரது அபிமானிகள் விடுவதாக இல்லை. அவரை யாரென்று தெரியாதவர்களும் திரும்பிப் பார்க்க வேண்டுமாம். எல்லாமே விளம்பர யுக்தி. முன்பெல்லாம் பொருள்களுக்குத்தான் விளம்பரம்.

இப்போது நல்ல முன்னேற்றம். பிறந்தநாள் விழா திருமணவிழா என்று களைகட்டுகிறது. அவர்கள் கண்டுகொள்ளாமல் இருந்தாலும் அபிமானிகள் விடுவதாயில்லை. அவர்களை வைத்து இவர்களுக்கு விளம்பரம் இவர்களை வைத்து அவர்களுக்கு விளம்பரம். இப்போது இன்ஸ்டாகிராமில் ஒரு படம் எடுத்துப்போட்டால். அவர்களுக்கு ஐந்தாயிரம் லைக்ஸ் வந்துவிட்டால் படம் போட்டவர்கள் சுமாராக இருந்தாலும் பேரழகுதான்.

இப்படி அழகைத்தீர்மானிப்பது லைக்ஸ்தான். உண்மையிலேயே சுமாராக இருப்பவர்களுக்கு நூறு லைக்ஸ்கூட வராவிட்டால் அவர் நன்றாக இல்லை என்று பதிவாகிவிடுகிறது. இதே பாதிப்பு படைப்புகளுக்கும் வந்து விட்டது. சமூக வலைத்தளங்களில் தீவிரமாக இருப்பவர்களின் படைப்புகள் ஃபேஸ்புக் போன்றவற்றின் ஈர்ப்பினால் பிரபலமடைகிறது. அதுவே சமூக வளைத்தளங்களில் பெரிதாக ஈடுபாடற்றவர்களின் படைப்புக்கள் பிரபலமடைவதில்லை.

ஒரு படைப்பு எப்படியெல்லாம் விளம்பரப் படுத்தப் படுகிறது என்பதற்கு பல யுக்திகள் உள்ளன. படைப்பை தொடர்ந்து விளம்பரப் படுத்திக்கொண்டே இருப்பது. தெரிந்தவர்களுக்கெல்லாம் சொல்வது. சமூக ஊடகங்களில் அறிமுகப்படுத்துவது என்றெல்லாம் பல வழிமுறைகளை கையாளும் போது அதற்கேற்ற பலன் கிடப்பதை தவிர்க்க இயலாது.

சான்றாக ஒரு பட்டி மன்றத்தை ஒரு அரங்கில் வைத்து நடத்தினால் அந்த அரங்கம் நிறையக்கூடிய பார்வையாளர்கள்

மட்டுமே பார்க்கக் கூடியதாக இருக்கும். அதையே தொலைக்காட்சி ஒன்றின் மூலம் நடத்தினால் அது பெரிய வீச்சைப் பெறும். இதை கணக்கில் வைத்து அரங்கில் நடைபெறும் விளம்பரமாகாத பட்டிமன்ற நிகழ்ச்சியின் தரத்தை நிர்ணயிக்க முடியாதல்லவா? எனவே விளம்பரத்தை வைத்து ஒரு நிகழ்ச்சியின் தரத்தை கூறமுடியாது போனாலும் அதை பார்ப்பவர்களால் அதன் தரத்தை உணர இயலும்.

விளம்பரமே வாழ்க்கை என்றாலும் விளம்பரத்தால் எதன் தரத்தையும் உயர்த்த விடமுடியாது. உங்கள் பற்பசையில் உப்பு இருக்கிறதா என்ற விளம்பரத்தின் மூலம் பற்பசை விற்பனையை வேண்டுமானால் கூட்டலாம். ஆனால் அதன் தரத்தை அந்த

விளம்பரத்தால் மாற்றிவிட முடியாது.


# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்